தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவராண்டு 2030 [redacted] பிரமாதி

வைகாசி

துணர் : 73] ஜூன் - 1999 [மலர் : 2

தமிழ்ப்பொழில்

பதிப்பாசிரியர் : *பாவலர். ச. பாலசுந்தரம்*

உள்ளுரை

1. வேற்றுமை மயக்கம் ... 573

— ச. பாலசுந்தரம்

2. தமிழ் யட்சகான நாடகங்கள் மொழிபெயர்ப்பு ... 581

— பொ. மருதமுத்து

3. பழமொழிகள் காட்டும் பெண்களின் தாழ்நிலைகள் ... 593

தொடரும்

— முனைவர் தா. ஈசுவரப்பிள்ளை

4. கட்டளைக் கலித்துறை ... 597

— சி. வை. தாமோதரம் பிள்ளை

தமிழ்ப் பொழில் கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ. 5.00	ரூ. 10.00
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60.00	ரூ. 120.00
வாழ்நாள் கட்டணம்	ரூ. 500.00	ரூ. 1000.00

வேண்டுகோள்

தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப்பெறுகின்றன. கட்டுரைகள் ஆறு பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருக. இருவரி இடைவெளியிட்டு, தட்டச்சிட்டு இருபடிகள் அனுப்புக. வெளியிடப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா.

தமிழ் வாழ்க

வேற்றுமை மயக்கம்

–ச.பாலசுந்தரம்

மொழிநிலை:–

மொழி பொருள் தருதற்கு இயங்கும் நிலையில் அது தனிமொழி, தொகைமொழி தொடர்நிலைமொழி என் முத்திறப்படும்.

தனிமொழி :

மலை கடல், பொன் நாடு ஊர் காலை, வேனில் கண் செவி அழகு, செம்மை, வரவு செலவு உண்டான் உண்கின்றான் உண்பான், உண்ணான், பொன்னன், அழகன், பிற, பிறிது, நனி எனவரும் நால்வகைச் சொற்களும் பெயர்ப்பொருள் வினைநிகழ்ச்சி என்னும் நிலையில் பொருளுணர்த்தும். பெயர்ச்சொற்கள் தொடர் (வாக்கியம்)ப்பொருள்தாரா...வினைச்சொற்கள் கருதுமிடத்து (வாக்கியப்) பொருள் தரும் வினைச் சொல் ஒரு பெயர்ப்பொருளுக்குரிய முடிக்குஞ் சொல்லாக வருமிடத்து வினைப்பயனிலை எனப்படும். பெயர்ச்சொல் பிறிதொரு பொருளுக்குரிய முடிக்குஞ் சொல்லாக வருமிடத்துப் பெயர்ப்பயனிலை எனப்படும் இங்ஙனம் பயனிலை கொண்டுநிற்கும் தொடர்களே வாக்கியம் எனப்படும் பயனிலைகளுக்கு உரியவாய் நிற்கும் பெயர்ப்பொருள் எழுவாய் – வினைமுதல் (கருத்தா) எனப்படும்.

தொகைமொழி:

பழந்தின்னி, பொற்றொடி, செந்தாமரை, மதிமுகம், இராப்பகல், மணிமேகலை (வந்தாள்) என்றுபிணைந்த இரு சொல்லாகவரும். உம்மைத் தொகை இரண்டிற்கு மேற்பட்டும் வரும். இவை பெயர்ச் சொற்களைப் போலவே எழுவாயாகவோ, பயனிலையாகவோ, வரும் இவை விரியுமிடத்து வாக்கியப் பொருளுணர்த்தும்.

தொடர்மொழி :

இரண்டும் இரண்டற்கு மேற்பட்டும் வருவன தொடர்நிலைமொழி (வாக்கியம்)யாகும், தொடர்கள் பொருள் விளக்கம் செய்யும் நிலைக்கண் அவ்வழித்தொடர் வேற்றுமைத் தொடர் என இருதிறப்படும். ஒரு பெயர்ப்பொருள் பயனிலை ஏற்று எழுவாயாக நிற்பினும் விளியேற்று நிற்பினும் அல்வழியுள் அடங்கும் ஒரு பெயர்ப்பொருள் பிறிதொரு எழுவாய்க்குரிய பயனிலையைச் சார்ந்து செயப்படுபொருள்,

கருவபபொருள் கோடற்பொருள், நீக்கப்பொருள் உடைமைப்பொருள் இடப்பொருள் ஆகியவற்றைச் சுட்டி நிற்குமிடத்து அவை அமைந்த தொடர் வேற்றுமைத் தொடர் எனப்படும். பெயர்ப்பொருள் எய்தியுள்ள வேற்றுமை நிலையை ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் உருபுகள் அடையாளமாக அமைந்துகாட்டும் அவ்வுருபுகள் விரிந்தும்வரும் மறைந்தும் நிற்கும்.

உருபுகளை அவ்வவ்வேற்றுமைகளாகச் சொல்வது இலக்கண மரபு. ஒரு தொடர் ஒரே வேற்றுமை கொண்டதாகவும் அமையலாம். அவை எழுவாயின் பயனிலையோடும் தமக்குரிய பிற பயனிலையோடும் முடியலாம்.

2. ஆறாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமை எல்லைப் பொருளும் பெயர்ப்பயனிலை கொள்ளும், இரண்டும், மூன்றும், நான்கும், ஐந்தும் ஏழும் வினைப் பயனிலை கொள்ளும் நான்கும் எழும் பெயர்ப்பயனிலையும் கொள்ளும் தொகைமொழிக்கண் தொக்கு நிற்கும் மூன்றாம் வேற்றுமை வினையை உள்ளடக்கிய பெயரொடு முடியும் இரண்டாம் வேற்றுமை வினைப்பயனிலை மட்டுமே பெறும். இவ்விரு பயனிலைகளே பெயர்ப்பொருளை வேற்றுமைப்படுத்தும். வேற்றுமைத் தொடர்கள் உருபுநிலையானும் பயனிலையானும் பெயர்ப்பொருள் எய்தியுள்ள வேற்றுமை நிலைகளைக் காட்டும்.

ஒரே வழி ஒரு வேற்றுமைக்குரிய உருபுநின்று பிறிதொரு வேற்றுமைப்பொருளைத்தரினும் ஒரு வேற்றுமைக்குரிய பயனிலைச்சொல் பிறிதொரு வேற்றுமைக்குரிய பொருளைத்தரினும் அவை வேற்றுமை மயக்கம் எனப்படும்.

கண்ணன் பாலுண்டான் – பாலையுண்டான் 2ஆம் வேற்றுமை
கண்ணன் வாள்வீசினான்–வாளால்வீசினான் 3 ஆம் வேற்றுமை
கண்ணன் பள்ளி வந்தான் – பள்ளிக்கு வந்தான் 4 "
கண்ணன் ஊர் நீங்கினான் – ஊரின் நீங்கினான் 5 "
இது கண்ணன் வீடு – கண்ணனது வீடு 6 "
கண்ணன் தேர் ஏறினான்– தேரின் கண்ஏறினான் 7 "

இவை ஒவ்வொரு வேற்றுமை மட்டும் கொண்ட தொடர்கள் கண்ணன் குழலை வாயால் ஊதினான் (2,3) கண்ணன் செவிக்கினிய குழலை வாயால் ஊதினான் (2,3,4,)கண்ணன் இடையினின்று

உருவிச்செவிக்கினிய குழலை வாயால் ஊதினான் (2,3,4,5) கண்ணன் சாத் தனது கையினின்று வாங்கிச் செவிக்கினிய குழலை வாயால் ஊதினான் (2,3,4,5,6) கண்ணன் சோலையின்கண் சாத்தனது கையினின்று வாங்கிச் செவிக்கினிய குழலை வாயால் ஊதினான் (2,3,4,5,6,7)

இவை இரண்டு முதலாக ஏழு வேற்றுமைகளைக் கொண்ட தொடர்கள். யாவன் ஊதினான்–கண்ணன், எதனை–குழலை,எதனால் வாயால், எதற்கு –செவிக்கு எங்கிருந்து சோலைக்கண் இவை ஊதினான் என்னும் ஒரு வினைப்பயனிலைகொண்டன. யாதின்நீக்கி சாத்தனது கையினின்றும் நீக்கி வாங்கி, இதுவும் எழுவாக்குரிய பிறிதொரு எச்சப்பயனிலை கொண்டது. எவன்கை சாத்தனது கை அது உருபு கையென்னும் பெயர்ப்பயனிலை கொண்டது. இங்ஙனம் வருபவை மயக்கமில்லாத வேற்றுமைத் தொடர்கள்.

இனி, கண்ணன் அறஞ்சார்ந்து ஒழுகினான் என்னும் தொடரில் அறம் என்னும் பொருட்பெயர் அறத்தைச் சார்ந்து எனவரின் செயப்படுபொருள். அறத்தின் கண் சார்ந்து எனவரின் இடப்பொருள் ஈண்டுச் சார்ந்தொழுகல் என்னும் பயனிலை இரண்டு வேற்றுமைகளுக்கும் உரியதாக நிற்கும் நிலை மயக்கமாம். நல்ல மருந்துக்கு நோய் தீரும், நல்ல மருந்தான் நோய் தீரும் இவற்றுள் தீரும் என்னும் பயனிலை இரண்டு வேற்றுமைக்கும் உரியதாக நின்றது. இவன் பணத்திற்கு அவா உற்றான், பணத்தின்கண் அவா உற்றான் என்பனவும் அத்தகு மயக்கமாம்.

மயக்கம் என்பது மங்கையின் அழகில் மயங்கினான் கள்ளுண்டு மயங்கினான் என உணர்வின் திரிபையும், பாலொடு தேன்மயங்கிற்று, மலரொடுமணம் மயங்கிற்று என பிரிக்க இயலாத கலப்பையும், பலாக்காய், கற்கண்டு, மரவேர் என்னும் எழுத்துப்புணர்ச்சித் திரிபையும் குட்டியை ஈனுதலால் விலங்கொடும் பறத்தலால் புள்ளொடும் வெளவால் ஒத்தலான் இருநிலைப்படுதலையும், நாடகத்தில் ஆண்பெண்ணாகவும், பெண் ஆணாகவும் ஒப்பனை செய்துகொண்டு நிற்றலையும் சுட்டிவரும்.

வேற்றமை மயக்கம் என்பது பொருள் மயக்கமாயின் வெளவால் நிலையையும் உருபு மயக்கமாயின் நாடகஒப்பனை யாளரையும் ஒக்கும்.

பொருள் மயக்கம்:

ஓர் உருபு தனக்குரிய பொருளை விட்டுவிடாமல் பிறிதோர் உருபிற்குரிய பொருளிலும் செல்லுதல் பொருள் மயக்கம் அஃதாவது ஒரு பயனிலைச்சொல் ஒரு தொடரில் உருபுவிரிந்தோ மறைந்தோ நிற்க ஒன்றற்கு மேற்பட்ட உருபுகளின் பொருளில் வருதலாம். இவ்வாறு மயங்கும் பயனிலைகள் சிறுபான்மையாகவரும் பொருளை விளக்கும் நிலையில் சிறப்புப் பெற்றுநிற்கும்.

எ.கா.– சார்தல் என்னும் பயனிலை இரண்டாம் வேற்றுமைக்குரிய பயனிலைச்சொல். அது ஏழாம் வேற்றமை யொடும் மயங்கும் சார்தல் வினைகாட்சிப் பொருளாயின் இரணடாம் வேற்றுமையாக வரும் கருத்துப்பொருளாயின் ஏழாம் வேற்றமையில் வரும் இவற்றைக் கருமச் சார்பு என்று கூறு. தூணைச் சார்ந்தான் கருமச்சார்பு உடம்பால் நெருங்குதல் புத்தசமயத்தின் கண்சார்ந்தான்–கருத்தால் நெருங்குதல் –அரசனைச் சார்ந்தான் எனின் அரசன்உடம்பை நெருங்கியிருத்தலாம். அரசன்கண் சார்ந்தான் எனின் அவன் அருளை நெருங்கியிருத்தலாம்.

இவ்வாறே நோக்குதல் என்னும் செயப்படு பொருளுக்குரிய வினை கருத்துப் பொருளாக வருமிடத்து ஏதுப்பொருளில் மயங்கும் செயல் நோக்கத்தை நோக்கு நோக்கம் என்றும் கருத்து நோக்கத்தை நோக்கல் நோக்கம் என்றம் கூறுவர். வானை நோக்கி நிற்கின்றார் என்னுமிடத்து வான் ஆகாயம் என்னும் நேர்பொருள் தருமிடத்துச் செயப்படுபொருளைத்தரும் வானின் பயனாகியமழை எனப்பொருள் தருமிடத்து ஏதுப்பொருளைத் தரும் இதனைத் தொல்காப்பியர் இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம் அவ் இரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும். என விளக்குவார்.

உருபுமயக்கம் :

ஓர் உருபு தனக்குரிய பொருளை விட்டுப் பிறிதொன்றன் பொருளைத்தருதல் உருபு மயக்கமாம். எ.கா. கோட்டுப்பூச்சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினிர் என்று. இதன் கண் ஒருத்தி என்பது செயப்படுபொருள்தாராமல் ஒருத்திக்கு எனக்கோடற்பொருளில் நிற்றலும் கிளையரிநாணற்கிழங்கு ஈன்ற மணற்கு மணல் இடம் பொருளாக நிற்றபின் குவ்வுருபு கோடற்பொருளை விட்டுஇடப் பொருளாக நிற்றலும் மயக்கமாம். கிழங்கு மணற்கீந்த முளை

எனின் கோடற்பொருள்தரும்.

இனி ஊரான் ஓர் தேவகுலம் என்னும் தொடரில் ஆன் பனறுதொறு (ஒவ்வொன்று) என்னும் பொருள்தரும் இடைச்சொல்லாம். அவ்வாறே தூங்குகையான் ஓங்குநடைய யானை என்னும் தொடரில் ஆன் உருபன்று ஒடு என்னும் இடைச்சொற்பொருள் ஒடு உருபிற்கு உடனிகழ்ச்சி என்னும் வேற்றுமைப்பொருள் கற்பித்து உருபுமயக்கம் என்று உரையாளர் கூறுவது பிழையாம். தொங்குகின்ற துதிக்கை யானையின் ஓங்கு நடைக்குக் காரணமாயின் மயக்கமின்றாம்.

வேற்றுமை மயக்கம் பல நிலைகளில் வரும்.

1. உருபு விரிந்து நிற்கும் தொடர்களிலும், மறைந்து நிற்கும் தொடர்களிலும் தொகை மொழிக் கண்ணும் வரும்.

எ.கா. நீதியைச் சார்ந்தான்–நீதியின் கண்சார்ந்தான் பழி நீக்கினான்–பழி நீங்கினான். நாகர்பலி என்னும் தொகை மொழி– நாகரைக்கொடுத்தபலி, நாகாற் கொடுக்கப்பெற்ற பலி நாகார்க்குக் கொடுத்தபலி, நாகருடையபலி நாகர்கண் நேர்ந்தபலி எனவரும்.

2. முதலும் சினையும் ஒரு தொடாரக வருமிடத்தும் நிகழும்:

எ.கா: யானையது கொம்பினைக் குறைத்தான்–யானை வுவமைப்பொருள்

யானையைக் கொம்பின் கண் குறைத்தான்–யானை செயப்படுபொருள் யானையின் கண்கொம்பைக் குறைத்தான்–யானை இடப்பொருள் இம்மயக்கம் ஒருவன் தாயொடு பிறந்தமையான் மாமனாகவும் தமக்கையை மறந்தமையான் மைத்துனனாகவும் ஆதலை ஒக்கும் முதற்பொருளில் அது உருபும் கண்ணுருபும்வரின் சினைப் பொருளில் ஐ உருபுவரும் முதற்பொருளில் ஐயுருபுவரின்சிலைப் பொருளில் கண்ணுருபுவரும்.

3. ஒரு பொருளின் உறுப்புப்பற்றி வினைப்பயனிலை இரண்டாவதனொடும் ஏழாவதனொடும் வரும். எ.கா. கண்ணைக் குத்தினான்–என்றும்– கண்ணுள் குத்தினாஎவ்வும் செயப்படு பொருளே இடமாகவும் நிற்றலின் இப்பொருள் மயக்கம் அமைவதாயிற்று.

4. பொருளமைதி நோக்கியும் ஒரு உருபுக்கு மாற்றாகப் பிறிதொரு உருபு மயங்கி வரும் சாத்தன் தாய் என்னும் தொகைச் சொற்கள் அஃறிணையாயின் சாத்தனது தாய் எனவும் உயர்திணையாயின்

சாத்தனுக்குத்தாய் எனவும் குவ்வுருபும் அது உருபும் மயங்கிவரும்.

5. தடுமாறு தொழிலமைந்த தொடர்க்கண் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கிவரும் புலிகொன்றயானை இது என்னும் தொடர்புலியைக் கொன்றயானை எனவும் புலியாற் கொல்லப்பட்ட யானை எனவும் வரும்.

6. ஒத்த உருவமுடைய உருபுகள் பொருளால் மயங்கும் தமிழில் இன் என்னும் உருபு ஏதுப்பொருளில் வரும். மூன்றாம் வேற்றுமை இன்னுருபு நீக்கப்பொருளில் வரும் ஐந்தாம் வேற்றமை இன்னுருபும் பொருளால் வேறுபட்டவை உருவத்தான் ஒன்றுபட்டவை இவ் இன்னுருபு ஆக்கச்சொல்லொடு வருமிடத்து அவ்இரண்டு வேற்றுமையொடும் மயங்கும். பாலின் ஆயிற்றத்தயிர் என்னும் தொடர். பாலினால் தயிர் உண்டாயிற்று என்பது பொருளாயின் இன் ஏதுப்பொருள் உருபு.- பாலாக இருந்ததுபின் தன் தன்மை நீங்கித் தயிராக ஆயிற்று என்பது பொருளாயின் இன் நீக்கப் பொருள் உருபு. இதனைத் தொல்காப்பியர் "மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி நோக்கு ஓரனைய என்மனார் புலவர்" என்பார் இந்நூற்பாவின் செம்பொருள் நோக்காமல் உரையாசிரியன்மார் தத்தமக்குத் தோன்றியவாறு உரைகூறிச் சென்றனர்.

7. தொகை மொழிகள் கூறுவோர்கருத்திற்கு ஏற்ப ஒன்றற்கு மேற்பட்ட பொருளில் நிற்கும். ஒரு பொருளுக்குரிய உருபு விரிந்தவழிப் பிறிதொன்றனொடுமயங்கா எ.டு. பொற்குடம் என்பது பொன்னாலாகிய குடம் என்றும் (கட்குடம் என்பது போலப்) பொன்னை உடையகுடம் என மூன்றாவதற்கும் ஆறாவதற்கும் பொதுவாகநிற்கும்.

மரவேலி: என்பது மரத்தினாலாகிய வேலி மரத்திற்குக் கோலியவேலி என மூன்றாவதற்கும் நான்காவதற்கும் பொதுவாக நிற்கும். காட்டு யானை என்பது காட்டிற்குரிய யானை, காட்டின்கண் வாழும் யானை என ஆறாவதற்கும் ஏழாவதற்கும் பொதுவாக நிற்கும் நூற்குற்றங் கூறினான் என்னும் தொடர்மொழி நூலைக்குற்றம் கூறினான் நூலால் (நூல்=சட்டநூல்) குற்றங்கூறினான் நூலுக்குக் குற்றங்கூறினான், நூலது குற்றங்கூறினான் என இரண்டு, மூன்று, நான்கு, ஆறு ஆகியவற்றொடுவரும்

8. நான்கனுருபுவிரிந்து நிற்கும் சில தொடர், பொருள் நோக்கி உருபுமயக்கமாகவும் பொருள் மயக்கமாகவும் நிகழும். எ.டு. யானைக்குக் கோடுகூரிது எனக்கோடற்பொருளாக உள்ள கோடு என்பதை உடைமைப்பொருளாகக் கொள்ளுமிடத்து யானையது கோடு கூரிது என மயங்கும். பணத்திற்கு ஈடாகக் கொள்ளப்பட்டமையின் பணத்திற்குக் கொண்ட நெல் எனப்பட்டது பணத்தைக் கருவியாகக் கருதின் பணத்தாற்கொண்ட நெல் என மயங்கும். கருவூர் மருவூரைத் தனக்குக் கீழ்ப்பகுதியாகக் கொண்டுள்ளது என்னும் பொருளில் கருவூர்க்குக் கிழக்கு மருவூர் எனபட்டது. கருவூரை எல்லையாகக் கொள்ளுமிடத்து கருவூரின் கிழக்கு மருவூர் என மயங்கும். ஒருவன் வருகையைக் கொண்டிருந்தமைபற்றி நேற்றைக்குவந்தான்எனப்பட்டது. நேற்றைப் பொழுதை இடமாகக் கொள்ளுமிடத்து நேற்றைக்கண் வந்தான் என மயங்கும். இங்ஙனம் நான்காம் வேற்றுமை உருபு மயங்கும் இதனைத் தொல்காப்பியர். இதனது இது விற்று என்னும் கிளவியும், அதனைக் கொள்ளும் பொருள் வயினானும் அதனாற் செயற்படற் கொத்தகிளவியும் முறைக் கொண்டெழுந்த பெயர்ச் சொற்கிளவியும் பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும் காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும் பற்றுவிடுகிளவியும் தீர்ந்து மொழிக் கிளவியும் அன்னபிறவும் நான்கனுருபிற்றொன்னெறி மரபின தோன்றலாறே என விளக்குவார்.

எழுவாய் வேற்றுமை மயக்கம்

ஆகுபெயரின் பொருள்நிலை எழுவாய் வேற்றுமையின் மயக்கமாக அமைவதே என்பது தொன்னூலாரின் கருத்தாகலான் அம்மரபினை ஒட்டித் தொல்காப்பியர் ஆகுபெயரிலக்கணத்தை வேற்றுமை மயங்கியலில் வைத்துக் கூறுகின்றார்.

ஒரு பெயர்ச்சொல் தனக்குரிய பொருளைத்(பிரிபின்றி) உணர்த்தின் அதனை ஆக்கப்பெயர் என்ப ஆக்கப்பெயர் எனினும் இயற்பெயர் எனினும் ஒக்கும் செயப்படுபொருள் முதலிய வேற்றுமை நிலைகளால் தன்னொடு தொடர்புடைய பிறிதுபொருளை உணர்த்து மிடத்து அஃது ஆகுபெயர் எனப்படும். ஆகுபெயர் தனக்குமூலமாக உள்ள பெயரொடு யாதானுமோர் வேற்றுமைத் தொடர்புடையதாகவரும்.

தெங்கு என்பது ஒரு மரத்தின் பெயர் தெங்கு வளர்ந்தது,

தெங்கினை வெட்டினான் எனவருமிடத்துத் தெங்கு இயற்பெயர் தெங்குதின்றான் மரம் தின்னற்குச் செயப்படுபொருளாதற்கேலாது அதனான் தெங்கு என்பது தனக்குத்தற்கிழமையாக உள்ள காயினை உணர்த்திற்று. இதனை முதலாகுபெயர் என்ப. தொல்காப்பியர் முதலிற்றோன்றும் சினையறிகிளவி என்பார் வெற்றிலை நட்டான் என்னுமிடத்து அஃது இலையை உணர்த்தாமல் அதற்கு மூலமாகிய கொடியை உணர்த்திநின்றது. இதனைச் சினையாகுபெயர் என்ப. சினையிற் கூறும் முதலறிகிளவி என்பார் தொல்காப்பியர். இவை ஆறாம் வேற்றுமைத் தற்கிழமைத் தொடர்புகாரணமாகச் செயப்படுபொருளாக நிற்கும் நிலை மயக்கமாம். இவள் காஞ்சிபுரம் உடுத்தான் என்பதிற் காஞ்சிபுரம் என்னும் இடப்பொருள் அவ்வூரின்கண் நெய்யப்பெற்ற தொடர்பால் சேலையை உணர்த்திற்று இது பிறிதின் கிழமைத் தொடர்பால் செயப்படுபொருளாயநிலை மயக்கமாம். கார் அறுத்தான் என்பதில் கார் நெல்லை உணர்த்திற்று கார் என்னும் காலப்பெயர் கிழமைத்தொடர்பால் செயப்படுபொருளாக மயங்கியது பொன் அணிந்தான் என்பது கருவித்தொடர்பால் அதனாலாகிய அணிகலனை உணர்த்திநின்றது. இவ்வாறே ஏனைய ஆகுபெயர்களும் யாதானுமொரு வேற்றுமைத் தொடர்பால் வரும்.

இம்மரபினை ஒருவாறுணர்ந்த இளம்பூரணர் ஆகுபெயர் எழுவாய் வேற்றுமை மயக்கம் என்றார். இப்பொருள் நோக்கினைப் பாராமல் சேனாவரையர் ஆகுபெயர் ஏனை வேற்றுமையும் ஏற்று நிற்றலானும் எழுவாய் வேற்றுமையாக நின்றவழியும் அதுபிறிதோர் வேற்றுமைப்பொருட்கள் சென்று மயங்காமையானும் அது போலியுரை என மறுத்துக் கூறினார். ஆகுபெயர் எழுவாயாக மட்டுமே வருமென்றோ அது பிற வேற்றுமைப் பொருளில் சென்று மயங்குமென்றோ இளம் பூரணர் கூறினாரில்லை. ஆசிரியர் "எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே" என்றதனான் எழுவாயாக வரும் பெயர்களுள் பொருள் திரிபின்றி வருவன இயற்பெயர்கள். ஆகுபெயர்கள் அவ் இயற்பெயர்களின் பொருளை விட்டு அவற்றோடு இயைபுடைய பிறிதொரு பொருளை உணர்த்தலின் அவ் இயைபுயாதானும் ஒரு வேற்றுமைத் தொடர்பான் அமைதலின் ஆகுபெயர் தரும்பொருளை அவ்எழுவாய்ப் பெயரின் மயக்கம் என்றார்

அஃதாவது தெங்குதின்றான் என்னுமிடத்து மரம்தன்பெயரை இழவாமல் தன்னின் ஒரு கூறுகிய காய்க்குப் பெயராக நிற்பதே ஈண்டு மயக்கமாம். இதனை ஓராமல் ஏனைய வேற்றுமை மயங்கங்களைக் கருதிக்கொண்டு உண்மையுரையைப் போலிவுரை என மயங்கினார் பிற விளக்கங்களைத் தொல்காப்பிய ஆராய்ச்சிக்காண்டிகையுரையுள் கண்டு கொள்க.

தமிழ் யட்சகான நாடகங்கள் மொழிபெயர்ப்பு

மொ. மருதமுத்து, எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்.,
ஆராய்ச்சி உதவியாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை– 600 113.

முகப்புரை

தமிழிலக்கியங்கள் காலந்தோறும் பல்வேறு இலக்கிய வகையையும் பெற்று வந்துள்ளன. அவற்றுள் யட்சகானம் என்னும் நாடக வகையும் ஒன்றாகும். இதுவரை தமிழில் ஆறு யட்சகான நாடகங்கள் தோன்றியுள்ளன. அவை: 1. நீலி யட்சகானம், 2. சாரங்கதரன் யட்சகானம், 3. தேரூர்ந்த சோழன் யட்சகானம், 4. சிறுத்தொண்டர் யட்சகானம், 5. நரசிங்க விஜய யட்சகானம், 6. வல்லாளராசன் யட்சகானம்! இவ் ஆறு யட்சகான நாடகங்களும் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் சுவடி இலக்கியங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் முதல் மூன்று யட்சகான நாடகங்களை ஆங்கில மொழிபெயர்ப்புடன் சென்னை ஆசியவியல் நிறுவனம் பதிப்பித்துள்ளது. இம்மூன்று யட் சகான நாடகங்களின் மொழிபெயர்ப்பு எவ்வாறு அமைந்து விளங்குகிறது என்பதை அறியும்முன் " யட்சகானம்" என்னும் நாடகவகையைப் பற்றிச் சிறிதுகண்டுவிட்டு அதன்பின் அதனை ஆய்வது பொருத்தமாக அமையும்.

யட்சகானம்

கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் "யட்சர்" என்னும் இனத்தவர் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தங்கள் தலைவனாகிய குபேரனின் செல்வமானது நிலைத்துப் பெருகவும், மக்கள் சந்ததி

வளரவும், அவர்கள் செல்வம் பெருகி வாழவும்வேண்டித் திருமகளாகிய இலக்குமியைப் புகழ்ந்துபாடிவணங்கும்பாடல் யட்சகானம்எனப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 24,25,26 பிப்ரவரி 1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற மொழிபெயர்ப்புப் பற்றிய தேசியக் கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரை இது.

மக்கள் மரபும் செல்வமும் தழைக்க யட்சதேவதைகளைப் புகழ்ந்து பாடும் பாடலாகத் தோன்றிய யட்சகானப்பாடல் நாளடைவில் கோயில்களில் நடைபெறும் காலை, மாலை பூசை நேரங்களிலும், திருவிழாக்காலங்களிலும் இசையும் நாட்டியமும் இணைந்து உருவாக்கப்பட்டு நாடகமாக நடிக்கப்பெற்றது.

தமிழ்நாட்டில் நிகழ்த்தப்பெற்றுவரும் தெருக்கூத்து, ஆந்திர நாட்டில் நிகழும் குச்சிப்புடி, வீதி நாடகம், கேரள நாட்டில் நடத்தப் பெறும் பயலாட்டா ஆகியவற்றைப் போன்ற ஒரு நிகழ்கலையாக யட் சகான நாடகம் உருவாக்கப்பட்டது. 17,18 ஆம் நூற்றாண்டுகளில் கன்னட மொழியில் 300-க்கும் மேற்பட்ட யட்சகான நூல்களும், தெலுங்கு மொழியில் 500-க்கும் மேற்பட்ட யட்சகான நூல்களும் தோன்றியுள்ளன.

தமிழில் யட்சகானம்

தஞ்சைப் பகுதியில், கன்னடம், ஆந்திரம் ஆகியவற்றை அடுத்துள்ள தமிழ் மாவட்டங்களிலும் யட்சகான நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன. அந்த நாடகப் பாடல்களிலும், உரைநடைகளிலும் தமிழ்ச்சொற்கள் பல கலக்கப்பட்டன. அதனால் அந்த நாடகப் பொருள் தமிழ் மக்களுக்கு நன்றாக விளங்கியது. தியாகராச சுவாமிகள் இயற்றிய நௌகா சரித்திரம், பிரகலாத பக்த விஜயம் ஆகிய யட் சகான நாடகங்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டன. இதன் காரணமாகத் தமிழ்நாட்டிலும் யட்சகான நாடகங்கள் தமிழில் தோன்றி வளர ஆரம்பித்தன.

ஒய்சள மன்னரான வல்லாளராசன் வரலாறு யட்சகானமாகத் தமிழ்நாட்டில் வடமாவட்டங்களில் நடத்தப்பட்டது. அதன் பயனாய்த் தமிழில் வல்லாளராசன் யட்சகானம் என்னும் நாடகம் உருவாகி யிருக்கிறது. சைவநாயன்மார்களுள் ஒருவரான சிறுத்தொண்ட நாயனார் வரலாறு சிறுத்தொண்டர் யட்சகானமாகவும் மனுநீதி

சோழன் வரலாறு தேரூர்ந்த சோழன் யட்சகானமாகவும் திருமாலின் பத்துஅவதாரங்களில்

ஒன்றான நரசிங்கப்பெருமாள் அவதார வரலாறு: நரசிங்க விஜய யட்சகானமாகவும்: சாரங்கதரன் என்னும் மன்னனின் வரலாறு சாரங்கதரன் யட்சகானமாகவும் தமிழ்ப்புலவர்களால் யட்சகான நாடகங்கலாகப் பாடப்பெற்றுள்ளன. இவ் ஆறு யட்சகான நாடகங்களும் தமிழிற்குக் கிடைத்த அரும்பெரும் நாடகங்களாகத் திகழ்கின்றன. இவற்றில் நரசிங்க விஜய யட்சகாணம் தவிர்த்து, மற்ற ஐந்துநூல்களும் பதிப்பாகி வெளிவந்துள்ளன.

மூன்று யட்சகான நாடகங்களின் பதிப்பு

நீலி யட்சகாணம், சாரங்கதரன் யட்சகானம், தேரூர்ந்த சோழன் யட்சகானம் என்னும் இம்மூன்று யட்சகான நாடகங்களையும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிநூலகத்தில் புலவராகவும், பின் அங்கு காப்பாட்சியராகவும் (Curator) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடித்துறைத் தலைவராகவும் பணியாற்றித் தற்போது சென்னை ஆசியவியல் நிறுவனத்தில் சுவடிப்புலத் தலைவராக, அத்துறையில் அரைநூற்றாண்டுகாலம் அனுபவ முதிர்ச்சியும், ஆழ்ந்த அறிவும் பெற்றுத் தமிழ்ப்பணியாற்றிவரும் பேராசிரியர் முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்கள் சுவடியிலிருந்து பதிப்பித்துள்ளார்கள். இம்மூன்று நூல்களும் பதிப்புரை, ஆய்வுரை மூலம் ஆகிய முப்பகுதிகளைக்கொண்டு அமைகிறது. அந்நூல்களுள் ஒவ்வொரு பாடலின் கருத்து பொழிப்புரை, குறிப்புரை, சுவடிச்சொல் ஆகிய விளக்கங்கள் எழுதப்பெற்று அவை அவ்வப் பாடலின் கீழே கொடுக்கப்பெற்றுள்ளன. சுவடியில் காணும் எழுத்துப்பிழைகளை நீக்கி, அரிய சொற்களுக்கு வேண்டிய விரிவான விளக்கங்கள் தந்து, சிறந்த ஆராய்ச்சி முன்னுரையுடன் இந்நூல்கள் புதிப்பிக்கப் பெற்றுள்ளன.

2. இவர் புதிப்பித்துள்ள பிற நூல்கள் 1. மெய்க்கீர்த்திகள், 2. ஆருடசோதிடம், 3. வர்மசூத்திரம்4. மனைநூல் என்னும் மனையடி சாத்திரம் 5. கோலாசல அரங்கன் சரிதம் 6. கணக்கதிகாரம்.

மூன்று யட்சகான நாடகங்களின் மொழிபெயர்ப்பு

சென்னை ஆசியவியல் நிறுவனம் புதுப்பிக்கும் அனைத்து

நூல்களும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. நம் தமிழ்மரபு மற்றும் பண்பாட்டுக் கலாச்சாரம், இலக்கியவளமை ஆகிய அனைத்தையும் சர்வதேச மக்களும் அறியும் வண்ணமாக தமிழ்மூலத்துடன் அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் தந்து வெளிவிடுவது பாராட்டிற்குரியதாகும். அவ்வகையில் நீலி யட்சகானம், சாரங்கதரன் யட்சகானம், தேரூர்ந்த சோழன் யட்சனகானம் ஆகிய மூன்று நூல்களும் வெளிவந்துள்ளன. இம்மூன்று யட்சகான நாடகங்களும் ஒரே பதிப்பாசிரியரைக்கொண்டு புதிப்பிக்கப்பட்டதுபோல் ஒரே மொழிபெயர்ப்பாளரைக்கொண்டு மொழிபெயர்க்கவும் பட்டுள்ளது. இந்நூல்களைச் சிறந்த முறையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரியில் கிட்டத்தட்ட இருபதாண்டுகள் ஆங்கிலத் துறையின் தலைவராகப் பணியாற்றி 1986இல் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஜிஎஸ். பாலகிருஷ்ணன் அவர்கள் இம்மூன்று யட்சகான நாடகங்களின் மொழிபெயர்ப்பைப் பற்றித் தனித்தனியாக ஆய்வோமாக.

3. இவர் விஜயா பாலகிருஷ்ணன், ஜிப்பி என்ற பெயர்களிலும், வேறு பல புனைபெயர்களிலும் கதை, கட்டுரை, நாவல், நாடகம், விமர்சனம், விஞ்ஞானம் என்று அனைத்துத்துறைகளிலும் ஏராளமாக எழுதியிருக்கிறார். இலக்கியச் சிந்தனையின் தொகுப்பிலும் இவர்கதை இடம் பெற்றிருக்கிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் நூற்றுக்கணக்கான தமிழ்நூல்களை விமர்சனம் செய்ததுடன், கதை கட்டுரைகளும், எழுதியிருக்கிறார். இவருக்குத் தமிழ், ஆங்கிலம், வடமொழி, மலையாளம் முதலிய மொழிகள் தெரியும். ஆசியவியல் நிறுவனத்திற்காக இவர் மொழிபெயர்த்த பிறநூல்கள்!

1. சந்தனத்தேவன் கதை (The Bandit Brothers)2. ஆமையர் அம்மானை (The Vows fulfilled)

நீலி யட்சகானம்

ஆசியவியல் நிறுவனத்தின் யட்சகானப் பதிப்புநூல்களின் வரிசையில் முதலாவதாக அமைவது நீலி யட்சகானம் ஆகும். முற்பிறவியில் தன்னையும் தன் கருவிலிருந்த குழந்தையையும் கொன்ற தன் கணவரை, மறுபிறவியில் அவள், நீலி என்னும்

---

1. சாரங்கதரன் யட்சகானம் ப. 15

பெண்ணாகப் பிறந்து, அவனது மனைவியாக அமைந்து அவனைக் கொன்று பழி தீர்ப்பதுதான் நீலி கதையாகும். இக்கதைதான் யட்சகான நாடகமாக இயற்றப்பட்டுள்ளது. எனவே கதைக் கருவிற்குப் பொருந்தும் வண்ணமாக இந்நூல், (A Tale of Nemesis) என்று ஆங்கிலத்தில் பெயரிடப்பெற்றுள்ளது. தமிழில் பதிப்புரை, ஆய்வுரை, மூலம் (நூல்) எனும் முப்பகுப்பில் அமைந்து இவை ஆங்கில மொழிபெயர்ப்பில் (The Editor's Note, Preface, Text (A Tale of Nemesis)என்ற அமைப்பில் அமைந்துவிளங்குகிறது. இந்நூலின் முதல் பாடலான,

"வந்த வல்வினை நீக்கி மனத்திலிருந்து
உந்து ஞான முதவுங் கருணையான்
ஐந்து வாண்முகம் ஐந்திரு செங்கைசேர்
தந்தி வாண்மலர்த் தாள்கள் சிரங்கொள்வாம்"

(பா. 1)

என்னும் விநாயகர் துதிப்பாடல்,

INVOCATION TO LORD VINAYHAKA

Let us surrender at the flower-like feet of vinayaka,
Dispeller of darkness and gloom
Giver of knowledge
Embodiment of kindness and charity
Gifted with five holy faces and ten hands
looks verify a tusker!

என ஆங்கிலத்தில் கருத்துச் சிதறாமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்நூலில் ஆசிரியரின் துதியாக வரும்.

"ஒல்லை மாணிக்க வாசகன் சொல்லுக்கு
உவமை யாகவே விளங்கிய
கல்வி மாணிக்க மான புலவரைக்
கருதிப் பணிவேன்
பாரில் உள்ளபுல வோர்க்கெ லாம் சிறு
பால னானயான் சொல்லும்
பூரி யுரையை நல்லோரெலாம்
விபசார முரையார்."

(பா. 9)

என்னும் பாடலானது ஆங்கில மொழிபெயர்ப்பில்,

Salutations to Scholarship of poets
Sublime as Tiruvacakam neetar
Of Manikka vacakar
Meekly I submit to fellow bards
To accept my effusions
Ignoring flaws.
Let me now render the tale of Nili
In Viruttappa metre
Bowing to custom and tradition."

என அமைந்து வருகிறது.

நீலி தன் குழந்தையின் அழுகையை நிறுத்தி, தன்னைப்பிரிந்து செல்லும் கணவன் தரிசனனைப் பார்த்துக் கூறுகிறாள்.

" பிள்ளை அழுங்குரல் ஆத்தியே–கொண்ட
புருஷன் முகத்தினை நோக்கியே –என்னைக்
கொள்ளத் துடைதட்டிக் கொண்டு–கொண்டவர்
கள்ளத் தனமாய் விட்டுப்போறது ஞாயமோ.... (பா.89)

இப்பாடலானது,

Putting the little one at case
She addressed her husband
Revered cettiyar!
do you nemember all the endeavour
To win my hand for ever?
Hours and hours of suspense
Before worthy recompense.

என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு இந்நூலிலுள்ள 130 பாடல்களும் 30 வசனங்களும் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

சாரங்கதரன் யட்சகானம்

ஆசியவியல் நிறுவனத்தின் யட்சகானப் பதிப்பு வெளியீட்டில் இரண்டாவதாக அமைவது சாரங்கதரன்யட்சகானமாகும். சிற்றன்னைச் சித்திராங்கியின் மோகவலைக்கு இணங்காத சாரங்கதரன், அவளால்

வீண்பழி சுமத்தப்பட்டுத் தந்தையான மன்னன் இராசநரேந்திரனின் ஆணையின்பேரில் கை, கால்கள் துண்டிக்கப் படுகின்றான். இக்கதையினைக் கருவாகக்கொண்டு இந்நூல் யட்சகான நாடகமாகப் பாடப்பெற்றுள்ளது.

இந்நூல் தமிழில் பதிப்புரை, ஆய்வுரை, மூலம் (நூல்) என அமைந்து, அதனின் ஆங்கில ஆக்கம் Editor's Note, Preface, Text (A Tale of Betrayal) என அமைந்து விளங்குகிறது. கதைக்கருவிற்குப் பொருந்தும் வகையில் இந்நூல், ஆங்கிலத்தில் A Tale of Betrayal எனப்பெயரிடப்பெற்றுள்ளது.

இந்நூலின் நான்காவது பாடலான,

"உரைசெயுந் தமிழிதே உலகில் பரவவுங்
கேட்போ ராலமுத மெனவுங்
கரமலர் கொண்டு உள்ளங் களிக்க
சரஸ்வதி பங்கயத் தாள்வணங்கு வேனே"

என்னும் கலைமகள் வணக்கமானது ஆங்கில மொழிபெயர்ப்பில் கீழ்க்கண்டவாறு அமைந்திலங்குகிறது.

SALUTATIONS TO KALAIMAKAL

I offer obeisance
At the lotus feet of the Goddess of learning
In the fond hope that my Tamil muse
sung in Yatcakanam style
Shall neverberate across the world
elevating listeners to divine repture

மன்னன் இராச நரேந்திரனும் தேவி ரத்தினாங்கியும் தாங்கள் தவமகிமையினால் பெற்றெடுத்த குழந்தை சாரங்கதரனுக்குக் காப்பு இடுகின்றார்கள். இதனை இந்நூலாசிரியர்,

"சிவன்மகிமை கண்டுமனை யிவனினிது செய்யுமொரு
தவமகிமை யால்வந்து தரிக்குங்குலக் கொழுந்தே
என்றுதான் கொஞ்சியிரு வண்ணமுலைப் பாலூட்டிக்
கண்ணோடு கண்ணணைத்துக் காப்பிடுவாள் நுதலில்"

(பா. 23)

என விளக்குகிறார். இப்பாடலானது ஆங்கில மொழிபெயர்ப்பில்,

Pleased with our auterities and penance
Lord civa blessed us with you,
The first malke issue in the fimily
Verily, a darling to be proud of!
so saying queen Rattinanki caressed the chitte
Fed it with milk, hugged it to her face
And brightened its forehead with holy dot.

என அமைந்து வருகிறது.

சாரங்கதரன் கை கால்கள் இழந்து காட்டில் துன்புற்றுக்கிடந்த போது இறைவனை வேண்டுகிறான். இதனை இந்நூலாசிரியார்,

"என்ன செய்வேன் சிவனே-நான்
ஏது செய்வேன்
உன்னரு ளில்லாம லிங்கே
உற்றதுணை யாருமில்லை
உய்யுங் கணக்கில்லை- உயிர்
இழப்பது நல்லது
செய்யுங் செயலென்ன-யிரு
கையுங் காலும் போச்சுதினி
பாதகி யில்லாத நிந்தை
ஓதிடவே யதுகேட்டு
தாதையும் விரோதமுடன்
தீதுசெய்ய வேநினைந்தான்
எண்டிசை பரந்த ராச
மண்டலேஸ் பரன்மகனைக்
கண்டவர்கை காலும்போன
நொண்டியென்று சொல்லலாச்சு " (பா. 138)

என்னும் பாடலால் விளக்குகின்றார். இப்பாடலானது ஆங்கில மொழி பெயர்ப்பில்,

Lord Civa, what whall I do hence?
Without your mercy, how can I function?
who else shall be my refuge?

Having lost hands and legs
What worthwhile thing can I do?
Better to give up the ghost
Rather than live in this state.
Great sinner my step-mother is
Has laid on me undersarved blame.
Believing her connected tale
My father turned hostile and punished me.
What a fall
The son of the mighty king
Proclaimed leader of the people
Has become a laughing stock
To be contemptuously called cripple!

என அமைந்து வருகிறது. இவ்வாறு இந்நூலில் அமைந்துள்ள 174 பாடல்களும் 95 வசனங்களும் கருத்தோட்டம் மாறுபடாமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தேரூர்ந்த சோழன் யட்சகானம்

ஆசியவியல் நிறுவனத்தின் யட்சகானப் பதிப்பு வெளியீட்டில் மூன்றாவதாக அமைவது தேரூர்ந்த சோழன் யட்சகானமாகும். கன்றினைக் கொன்ற குற்றத்திற்காகத் தன் மகனென்றும் பாராமல் தேர்க்காலில் இட்டுக்கொன்ற மனுநீதிச்சோழனின் கதையினைத் தழுவி எழுதப்பெற்ற நூல் இவ் யட்சகானமாகும். இந்நூலின் கதைக்கருவிற்குப் பொருந்தும் வண்ணமாக where Justice Chimes என்று ஆங்கிலத்தில் இந்நூல் பெயரிடப்பெற்றுற்றது. தமிழில் பதிப்புரை, ஆய்வுரை, மூலம் (நூல்) என அமைந்து, இவை ஆங்கில மொழிபெயர்ப்பில் Editor's Note, The author and his place of birth, A Critical Study, Text (where Justice Chimes) என அமைந்து விளங்குகிறது.

இந்நூலின் முதல் பாடலான,

"அஞ்சு கரத்தனை ஆனை முகத்தனை
இந்து யிளம்பிறை போலு முகத்தனை

நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

என்னும் விநாயகர் வணக்கப் பாடலானது ஆங்கிலத்தில்,

OBEISANCE TO LORD VINAYAKAR

I salute Lord Vinayakar,
Who dwells in my mind
who has five hands and the head of an elephant,
Who is the son of Civan
And infinite wisdom in carnate!

எனக் கருத்துமாறாமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இராசேந்திர சோழனின் மனைவி பட்டமாதேவி தன் செல்வ மகனைத் தாலாட்டிக் கொஞ்சி மகிழ்கிறாள். நூலாசிரியர் இதனை,

பாலனைக் கரத்தில் பாங்குட னெடுப்பள்
சோலையிற் கிளியெனச் சொலிமுத்த மிடுவள்
முழுக லாட்டியே முலையது கொடுப்பள்
அழுகு பெறவிழியி லருமையை யிடுவள்
பலப்பல மணிகளைப் பாங்குட னணிவள்
கலகல வெனத்தண்டை காலினுக் கிடுவள்
சுட்டிகட் டுவள்முகச் சுந்தரம் பார்ப்பாள்
கட்டி யணைத்துக் கொண்டென் கண்ணே யென்பாள்
இத்தனை நாளு மெங்கிருந்தீ ரென்பள்"
சித்தமுன் பாச்சுதே தியாகருக் கென்பாள் (பா. 36)

எனப் பலவாறு விளக்கிச் செல்வார். இப்பாடலானது ஆங்கிலத்தில் கீழ்வருமாறு விளக்கம் பெறுகின்றது.

While the king was giving away gifts,
The Queen was Cuddling the baby,
She gave it a ceremonial bath,
Fed it for the first time
Adorned it with jewels like anklet
And ornaments for the hair,
Applied collyrium to the eyes,
Hugged it lisping endearing words:

My darling, lovely parrot,
whither were you till now?
Lord Tiyakecar blessed rather belatedly.

சோழன், தன் மகன் வீதிவிடங்கனைத் தேர்க்காலில் இடுவதற்குமுன் மகனுக்கு அறவுரை கூறினான்.

"அரிதாகச் சிவனருள் ஆசைமகனே யுன்னைப்
பெரிதாக வளர்க்கச்சிவன் பறியாமல் போனான்
காசினியை நீயாள கயிலைமலை மேல்வாழும்
யீசினார் தமக்குமன மில்லாமல் போச்சு...."

(பா. 122)

என வரும் இப்பாடலான்து ஆங்கிலத்தில்,

son, born of the blessings of civan!
God is not favourably inclained
To moulding you as a reputed personality
He does not wish that you should...

என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு இந்நூலில் அமைந்துள்ள 135 பாடல்களும், 38 வசனங்களும் கருத்தோட்டம் சிதையாமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

முடிப்புரை

யட்சகான நாடகங்கள் இசையும் பாட்டும் இணைந்து உருவாக்கப்பட்டு நடிக்கப்பெறுவதால் இவற்றில் இடையிடையே விருத்தம்,திபதை,கந்தபத்தியம், தரு, வசனம், சிந்து போன்ற நடைகளில் அமைந்து அடதாளம், ஏக தாளம், சம்பை, திரிபுடை போன்ற தாள அமைப்புகளோடு இந்நாடகங்கள் தமிழில் அமைந்துள்ளன. இந்நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது இவ் இசைஅமைப்புகளை மொழி பெயர்ப்பாளரால் சரிவர கொடுக்கமுடியாமல் போய்விடுகிறது. இதற்குக் காரணம் பாடலின் கருத்தையும், அக் கருத்தைச் சுமந்துவரும் ஆங்கில அடிக்கும் முக்கியத்துவம் கொடுப்பதால்தான், மொழிபெயர்ப்பாளர் ஒரு நூலை ஆய்ந்து படித்து, சுவைத்து, பகுத்தாய்ந்து, அதன் பொருளை இன்னொரு மொழியில் உரைப்பவர் மட்டுமல்ல:அவரே ஒரு படைப்பாளியும் கூட. எனவே மொழிபெயர்ப்பு என்பது ஒரு புதிய

படைப்பு அல்லது புத்தாக்கம் (New writing) என்று கூறலாம்.

இசை என்ற ஒரு பகுதி ஆங்கில மொழிபெயர்ப்பில் அமையாவிட்டாலும், அதை நூலின் ஒரு குறை என்று நாம் ஒதுக்கிவிடமுடியாது. நமது பண்பாடுகளும் மரபுகளும் இதுபோன்ற மொழிபெயர்ப்பு நூல்களால் உலகமெங்கும் நம்மைப் பறைசாற்றி வாழவைத்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்"

என்னும் பாரதியாரின் மொழிக்கிணங்க நம்முடைய செய்திகள் வெளிநாட்டாரையும் சென்றடைய வேண்டும் என்ற பெருநோக்கில் ஆசியவியல் நிறுவனம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் நூல்களை வெளியிடுகிறது. அதில் இம்மூன்று யட்சகான நாடகங்களும் சிறப்புற்று அமைகின்றன.

துணை நூல்கள்

1. நீலி யட்சகானம், டாக்டர் பூ. சுப்பிரமணியம் (பதி), ஆசியவில் நிறுவனம், சென்னை 1994.
2. A Tale of Nemesis, Dr.P. Subramaniam (Ed.), Institute of A sian studies, Chennai 1996.
3. A Tale of Betrayal (சாரங்கதரன் யட்சகானம்), Dr. P. Subramaniam (Ed.), Institute of Asian studies Chennai, 1996.
4. Where Justice Chimes (தேரூர்ந்த சோழன் யட்சகானம்) Dr.P.

Subramaniam (Ed.), Institute of A sian studies, Chennai 1997

பழமொழிகள் காட்டும் பெண்களின் தாழ்நிலைகள்

முனைவர் தா. ஈசுவரப்பிள்ளை,
இணைப்பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.5

சமுதாயத் தரப்பிரிவுகள்:

தனிமனிதர்களால் ஆகிய அமைப்பு சமுதாயம் ஆகும். இச் சமுதாயத்தில் வாழ்கின்ற உறுப்பினர்களிடையே பல்வேறு காரணிகளால் ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. இவ்வேற்றத்தாழ்வு நிலையைச் சமுதாயத் தரப்பிரிவு அல்லது சமுதாய அடுக்கமைப்பு (Social Stratification) என்பர். சமுதாயத்தரப்பிரிவுகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட சமூகவியலாளர்கள் அனைத்துச் சமுதாயங்களிலும் ஏதோ ஒருவகையில் தரப்பிரிவுகள் நிலவுகின்றன எனக் குறிப்பிடுகின்றனர். சமுதாயத்தரப்பிரிவு என்பது பற்றிச் சமூகவியலாளர்கள் அளிக்கும் விளக்கங்களில் ஒரு சிலவற்றை இவண் காணலாம்.

சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறு நிலைகளில் (Levels) வரிசைப் பாகுபாட்டைக் குறிப்பது சமுதாயத்தரப்பிரிவு என ஜேம்ஸ் பி. மெக்கி குறிப்பிடுகின்றார். (James B. Mckee, 1981, P.189) சமுதாயத்தில் வாழ்கின்ற தனி நபர்களின் செல்வத்தின் அளவு, மதிப்பு,அதிகாரம் மற்றும் இவற்றுடன் தொடர்புடைய பிற காரணிகளின் அடிப்படையில் அவர்களை வரிசைப்படுத்தும்போது சமுதாயத் தரப்பிரிவுகள் தோற்றம் கொள்கின்றன. என ஜான் எம்ஷெப்பர்டு குறிப்பிடுகின்றார். ((Jon M. Shepard, 1981, P.203). ஜார்ஜ் ரட்சர் என்பார் சமுதாயத்தரப்பிரிவு முறை என்பது சமுதாயச் சமத்துவ மின்மையின் முறை என்கிறார். பொருளாதாரம், மதிப்பு,அதிகாரம் ஆகியவற்றின் வேறுபாடுகளின் அடிப்படையில் அமைந்த வரிசை முறைகளைச் சமுதாயத் தரப்பிரிவுகள் சுட்டுகின்றன என்பது ரீக்மெக்சியின் கருத்தாகும். (Reec Megee,1980,P.158) ரெய்மாண்ட் டபிள்று. முர்ரே சமுதாயம் நெடுநிலை மட்டத்தில் உயர்வி

தாழ்விகளாகப் பிரிந்து காணப்படுவதைச் சமுதாயத்தரப்பிரிவு என்று குறிப்பிடுகின்றார். ஆக்பர்ன் மற்றும் நிம்காப் என்போர் மக்கள், குழுக்கள் (Groups) ஆகியோருடைய தகு நிலையானது ஏறக்குறைய நிரந்தரமான படிநிலை அமைப்பில் (Hierarchy) தரவாரியாகப் பிரிக்கப்பட்டுள்ள செயற்பாங்கைச் சமுதாயத் தரப்பிரிவுகள் என விளக்குகின்றனர். வாழ்வியற் களஞ்சியம் தகுநிலை அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஓர் ஒழுங்கான படிநிலை அல்லது வரிசையில் அமைந்துள்ள சமூக அமைப்பு முறையைச் சமுதாய அடுக்கமைப்பு எனக் குறிப்பிடுகின்றது. (தொகுதி. 8, ப. 482).

சமுதாயத் தரப்பிரிவுகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட சமூகவியலாளர்கள் சாதிமுறை, பொருளாதாரம், வயது, பால், தோலின் நிறம், உடலின் வலிமை, கல்விச்சாதனை, மதிப்பு, அதிகாரம் முதலியனவற்றைச் சமுதாயத் தரப்பிரிவுகளின் காரணிகளாகக் குறிப்பிடுகின்றனர்.

பால் அடிப்படையிலான தரப் பிரிவுகள்

சமுதாயத் தரப்பிரிவுகளை உருவாக்கும் காரணிகளில் பால் வேறுபாடுகளும் (Sex differentiations) இன்றியமையாத பங்காற்றுகின்றன. பால் அடிப்படையில் ஆண்கள் உயர்வானவர்களாகவும், பெண்கள் தாழ்வானவர்களாகவும் சமுதாயத்தில் மதிக்கப்பெறும் நிலையில் தரப்பிரிவுகள் இடம்பெறக் காணலாம். பழங்காலத் தொன்மைச் சமுதாயத்தில் (primitive Commune) பெண்கள் உயர் சமூக மதிப்பைப் பெற்றிருந்தனர். ஆடவர்களும் பெண்களும் சமமானவர்களாகவே கருதப்பெற்றனர். இரு பாலாரிடையே வேறுபாடுகள் நிலவவில்லை. புராதனச் சமுதாய அமைப்ப சிதைவுற்று நாகரிகச் சமுதாய அமைப்பு தோற்றம் பெற்ற நிலையில், தாய் வழிச் சமுதாய அமைப்பு சிதைவுற்ற நிலையில் ஆடவர்கள் ஆதிக்கம் மிக்கவர்களாகவும் பெண்கள் தாழ்வானவர்களாகவும் கருதப்பெறும் நிலை உருவானது. சங்க காலத்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் பெரும் பாலும் உயர் சமுதாய மதிப்பையே பெற்றிருந்தனர் என்பதைச் சங்க இலக்கியம் மூலம் அறியலாம். சங்க காலத்திற்குப் பின் பெண்களின் நிலை வீழ்ச்சியடையத் தொடங்கியது எனலாம்: நாகரிகச் சமுதாய அமைப்பின் தோற்றம், மருதநில வளர்ச்சி, வேலைப் பங்கீடு,

சமயக் கொள்கைகள் முதலான காரணங்களால் பெண்களின் நிலை வீழ்ச்சியுறத் தொடங்கியது. எனலாம். பெண்களின் தாழ்நிலைகளை எவ்வாறு பழமொழிகள் புலப்படுத்துகின்றன என்பதை இனிக் காணலாம்.

பழமொழிகள்

சமுதாய மக்கள் தம் வாழ்க்கை அனுபவங்களால் உணர்ந்து வெளிப்படுத்திய சிந்தனைகளே பழமொழிகளாகத் திகழ்கின்றன. பழமொழிகள் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும், பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும், மரபுகளையும் வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கனவாக விளங்குகின்றன. மேலும், பழமொழிகள் அவை வழங்கும் சமுதாயத்தின் வரலாற்றை அறியவும் துணை நிற்கின்றன. இவ்வகையில் பழமொழிகள் சமுதாயத்தில் பால் அடிப்படையில் அமைந்த தரப்பிரிவுகளில் பெண்களின் தாழ்நிலைகளை எவ்வாறு சுட்டுகின்றன எனக் காணலாம்.

பெண்கள் தாழ்வாக மதிக்கப்பெற்றமை

பால் அடிப்படையில் பெண்கள் மென்மைத்தன்மை உடையவர்களாகவே பெரும்பாலும் காணப்பெறுகின்றனர். அடக்கமுடைமை, நாணமுடைமை என்பன பெண்களின் அணிகலன்கள் எனச் சமுதாயத்தால் கருதப்பெறுகின்றது. இத்தகைய இயற்கைக் குணங்களும், உடலியல் குணங்களும் பால் அடிப்படையில் பெண்கள் ஆண்களைவிடத் தாழ்வானவர்களாக மதிக்கப்பெறும் நிலையை உருவாக்குகின்றன. ஆண்கள் வீரம் மிக்கவர்களாகவும், செயல்திறன் மிக்கவர்களாகவும், துணிவு உடையவர்களாகவும் கருதப்பெறும் நிலையில் சமுதாயம் ஆடவர்களை உயர்வாக மதிக்கின்றது. இந்நிலையை விளக்கும் வகையில் "சாண் பிள்ளை ஆனாலும் ஆண் பிள்ளை" என்ற பழமொழி நிலவுகின்றது எனலாம்.

கற்பு நிலையில் இணையான அழுத்தமின்மை

பெண்கள் கற்புடன் திகழவேண்டும் என்றும், கணவனையே தெய்வமாகத் தொழுது போற்ற வேண்டும் என்றும் சமுதாயம் வலியுறுத்துகின்றது. பெண்கள் இளம் வயதில் கணவனை இழக்கும் நிலையில் கூட மறுமணம் செய்தல் என்பது கற்புக்கு இழுக்கு எனக் கருதப் பெற்றது. அவர்கள் விதவை நிலையிலேயே தம் வாழ்க்கையைக் கழிக்க வேண்டியுள்ளது. ஆனால் ஆடவர்களோ மணம் புரிந்த மனைவி உயிருடன் வாழும்போதே தம் ஆதிக்க

நிலை காரணமாகவும், பொருளாதார மேம்பாடு காரணமாகவும் மற்றொரு பெண்ணை மணம் செய்கின்றனர். பெண்களின் கற்புக்கு அழுத்தம் கொடுக்கும் சமுதாயம் ஆடவர் கற்புக்கு இணையான அழுத்தம் கொடுக்காமை பெண்ணினத்தின் தாழ்நிலையையே காட்டுகின்றதெனலாம்.இந்நிலையை விளக்கும் வகையில்,"கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்", இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம" என்ற பழமொழிகள் விளக்குவனவாகக் கொள்ளலாம்.

வரதட்சணைக் கொடுமைக்குள்ளாதல்

திருமணம் என்பது இரு பால் உள்ளங்கள் மனம் ஒத்து இல்லற வாழ்க்கையை மேற்கொள்ள வழி வகை செய்யும் ஒரு நிகழ்ச்சி. ஆடவரும் பெண்டிரும் இல்லற வாழ்வைத் திருமணம் மூலம் தொடங்குகின்றனர். இதில் இருவர்க்கும் இணையான பங்கு உள்ளது. இல்லறம் என்ற வண்டியில் இரு சக்கரங்களாகக் கணவனும், மனைவியும் திகழ்கின்றனர். ஆனால், திருமணத்தின்போது மணமகன் வீட்டார் வரதட்சணை கொடுக்க வேண்டிய கொடிய நிலை சமுதாயத்தில் நிலவுகின்றது. மணமகளின் கல்வி, சாதி, அதிகாரம், பதவி, பொருளாதார நிலை முதலியவற்றிற்கேற்ப மணமகள் வீட்டாரிடம் வரதட்சணை வாங்கும் நிலை உள்ளது. இதனால் பெண்களைப் பெற்றவர்கள் உடல், உள்ள நிலைகளில் பெரும்பாதிப்புக்குள்ளாகின்றனர். பெண் குழந்தைகளைப் பெற்றோர்களே வெறுத்தொதுக்கும் நிலை ஏற்படுகின்றது. பெண் குழந்தைகளைக்கருவிலேயே கொல்லும் கொடிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. வரதட்சணைக் கொடுமை, பெண்களை மணம் செய்விக்கப் பெற்றோர் உறும் அல்லல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு "அஞ்சாறு பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்" "ஐந்து பெண்கள் பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்" என்ற பழமொழிகள் தோன்றின எனக் கொள்ளலாம். பெண்களின் திருமணத்தின்போது பெற்றோர்கள் மணமகளின் தகுதிக்கேற்ப நகைகள் கொடுக்க வேண்டியுள்ளமையை, "மகள் பிறப்பதற்குள் போட்டுப் பாரு, மருமகள் வருவதற்குள் தின்று பாரு" என்ற பழமொழி உணர்த்துகின்றது எனலாம்.

தொடரும்......

சி. வை. தாமோதரம் பிள்ளை

இயற்றிய

கட்டளைக் கலித்துறை

கி.பி. 1881 இல் (விசு ஆண்டு, வைகாசி மாதம்) இரண்டாம் பதிப்பாகச் சென்னை சதாவதானம் சுப்பிரமணிய ஐயரது வித்தியாவர்தனி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட நூலின்

மறுபதிப்பு

மறுபதிப்பு :

ய. மணிகண்டன் எம்.ஏ.,எம்.ஃபில்.,

தமிழ்ப்பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

மறுபதிப்பின் பதிப்பாசிரியருரை

தமிழின் யாப்பு நூற்பரப்பு ஆழ அகலம் மிக்கது. தமிழின் யாப்பிலக்கண நூல்கள் பலவும் பல்வகைப் பாக்களுக்கும் யாப்புறுப்புகளுக்கும் ஒருசேர இலக்கணங்கூறுவனவாய் அமைந்துள்ளன. சில மட்டும் 'ஒரு யாப்புறுப்புக்கு மட்டும்' 'ஒரு பாவகைக்கு மட்டும்' எனத் தனித்து விளக்கமாக இலக்கணங்கூறுகின்றன. அவ்வாறான நூல்களாக 'வண்ணத்தியல்பு' 'விருத்தப்பாவியல்' 'கலைமணி பூபதீயம்' 'குமார பூபதீயம்' 'சிந்துப் பாவியல்' 'தொடையதிகாரம்' என்பன அமைந்துள்ளன. இவ்வரிசையில் கொள்ளத்தக்க நூலாகச் சி.வை. தாமோதரம் பிள்ளை படைத்த கட்டளைக் கலித்துறை என்னும் நூலும் உள்ளது.

சி.வை.தா. அவர்களின் 'கட்டளைக் கலித்துறை' என்னும் சிறு இலக்கண நூற்படைப்பு, இலக்கண வரலாற்றாசிரியர், ஆய்வாளர் மிகப்பலரின் பார்வைக்கும் சென்று சேரவில்லை என்பது வருந்தத்தக்கது. இந்நூல் கி.பி. 1881 ஆம் ஆண்டு 'இரண்டாம் பதிப்பு' எனக் குறிக்கப்பெற்று வெளிவந்துள்ளது. இந்நூல் இன்று பார்வைக்குக் கிடைப்பதும் அரிதினும் அரிதாய் உள்ளது.

மூன்று காரிகைச் சூத்திரத்தை இயற்றியும், உரைநடையால் விரிவாக விளக்கியும், பல இலக்கியங்களிலிருந்து பாடற்சான்று காட்டியும் முந்து இலக்கண நூற்பாக்களை மேற்கோள் காட்டியும் கட்டளைக் கலித்துறை எனும் பாவின இலக்கணத்தை இச்சிறு நூலில் சி.வை.தா. அவர்கள் தெளிவாகப் படைத்துள்ளார்.

இந்நூலைத் தாம் எழுதியமைக்கான காரணத்தைப் பின்வருமாறு சி.வை.தா. குறிப்பிட்டுள்ளார்.

> "..........எனவுங் கூறிய (முந்தைய) இலக்கணச் சூத்திரங்கள் குன்றக் கூறலென்னுங் குற்றமுடையன வாதலானும், பிற்றைநாட் டோற்றமுடையதாயினும் பெரும்பாலும் இக்காலத்தில் அந்தாதிகள் தனியன்கள் கலம்பகம் கோவைத்துறை

இயற்றப்படுகின்றமையானும், வெண்பாவும் விருத்தமுமொப்பச் சாதாரண வழக்கில் வந்து பயிலும் இச்செய்யுளிலக் கணந் தமிழ்மாணாக்கர் அனைவர்க்கும் மிக உபயோகமாமெனக் கருதிப் பல நூல்களினும் ஆங்காங் கிலைமறை காய்போலக் கிடந்தவற்றைத் திரட்டி ஈண்டெழுதலாயினோம்."

இந்நூலுக்குப் புரசை—அஷ்டாவதானம் சபாபதி முதலியாரும், கோப்பாய் வித்துவான் சபாபதி பிள்ளையும் சிறப்புக்கவிகள் வழங்கியுள்ளனர்.

கலித்துறையானது விருத்தக் கலித்துறை, கட்டளைக் கலித்துறையென்றும், விருத்தக் கலித்துறையானது காப்பியக் கலித்துறை, கலிநிலைத்துறையென்றும் கட்டளைக் கலித்துறையானது திலதக் கலித்துறை, கோவைக் கலித்துறையென்றும் வகைப்படுவதை இந்நூல் விளக்கிச்செல்கிறது.கட்டளைக் கலித்துறையின் இலக்கணம், சிறப்பியல்பு, வகைகள், மோனையமைய வேண்டிய முறை, சீர்மோனை, சொல் மோனை, உத்தம மோனை, மத்திம மோனை, அதம மோனை, பக்குவிடல் முதலிய யாப்புக்கூறுகள் இந்நூலில் தெளிவுறக் கூறப்பட்டுள்ளன.

கட்டளைக் கலித்துறையின் இலக்கணங்கூறும் இந்நூலை, முனைவர் அன்னிதாமசு அவர்கள் "ஒரு பாவகைக்கான சான்றிலக்கியம்" என்று குறிப்பிடல் ('யாப்பியல் சுவடிப்பதிப்புகள்' கட்டுரை, சுவடிப்பதிப்பு வரலாறு (தட்டச்சுநூல்), தமிழ்ப்பல்கலைக்கழகம் 1990) யாப்பிலக்கண ஆய்வில் தலைப்பட்டு நிற்போராலும் இந்நூல் சரியாக இனங்காணப்படாத நிலையைக் காட்டுகின்றது.

இந்நூல், மோனையைச் சீர்மோனை, சொல் மோனை என இருநிலைப்படுத்தல் எண்ணத்தக்கது, தண்டபாணி சுவாமிகள் அறுவகையிலக்கணத்தில் 'கள்ளமோனை' எனக் கூறும் மோனை வகையையே இந்நூல் 'சொல்மோனை' என்று சுட்டி விளக்குகின்றது.

இந்நூல் கலம், காரிகை, (காரிகையுரை), வீரசோழியம், தொன்னூல் விளக்கம் ஆகிய இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ள நூற்பாக்களையும், தஞ்சைவாணன் கோவை, அமிர்தகவிராயர் ஒருதுறைக்கோவை, மறைசையந்தாதி முதலிய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பாடல்களையும் எடுத்துக்காட்டியுள்ளது.

இந்நூலுள் ஆங்காங்குச் சி.வை.தா. அவர்கள், படைத்துள்ள

மூன்று காரிகைச் சூத்திரங்களையும், கட்டளைக்கலித்துறையாகவும் அறுசீர் ஆசிரிய விருத்தமாகவும் ஒரு பா இருவடிவிலும் அமைதலைக் காட்டி இலக்கணச் செய்திகூறும் பாடலையும் இவண் தொகுத்துக் காணலாம்.

சூத்திரங்கள்

1. அடிதொறும் வெண்டளை யாய்விளங் காய்முடி வாய்நடுவே
நெடிலிறுங் காய்விள நேரா தடுத்து நெடிலிடைக்காய்
நடைபெற லற்றுநன் னேர்பதி னாறு நவிலெழுத்தாய்க்
கடையுறு மோனைமற் றேயோர் விகற்பக் கலித்துறையே.

2. முற்றாகு மோனை முதலா மிறுதி முதலயல்வே
றுற்றா வதுமது வோர்பின் முனோடிடை யோய்ந்துநிற்கப்
பெற்றா லஃதிடை பேசைந்தில் மோனை பிறங்கிலதேற்
கற்றார் நவில்வ ரன்றோகடை யென்று கலித்துறைக்கே.

3. மூன்றோ டிரண்டயல் முன்னிய சீர்கள் முடிவடியில்
தேன்றோய் மொழியின் றிறம்பக் கிசைத்த சிறப்புடைத்தாய்
வான்றோய் கலித்துறை வந்திடிற் கோவையின் வாய்மையதென்
றூன்றோய்ந்த வேல்விழி யாய்உயர் பாவல ரோதுவதே.

இலக்கணச் செய்தி கூறும் பாடல்:

நாவின்பா லோதினா னைந்தைஞ்சீர் வாய்மைபோ னாட்டுபாவெப்
பாவின்பா லாகுமோ பார்மீதே காரிகைப் பாடலாமோ
ஈவின்பா லச்சுநேர்க் கீரெட்டாய் வெண்டளைக் கேற்றதாகிப்
பூவின்பாற் சேர்விளங் காயீற்றே பூண்டிப்பா போந்ததாலே.

யாப்புலகில் தனித்து மதிக்கத்தக்க இச்சிறு நூல் யாப்பியல் ஆய்வாளர், ஆர்வலர் பார்வையிற்பட்டுப் பயன்விளைக்கவேண்டுமெனும் நோக்கில் இவண் மறுபதிப்பு செய்யப்படுகின்றது. இந்நூலினுள் உள்ள அடிக்குறிப்புகள் சி.வை.தா. அவர்களால் தரப்பட்டனவாகும். இந்நூலின் நகற்படியைச் சில ஆண்டுகட்கு முன் வழங்கியுதவிய புலவர் திரு. தேவராசன் (வடசென்னை) அவர்களுக்கு நன்றி.

ய. மணிகண்டன்.

சிறப்புக் கவிகள்

புரசை—அஷ்டாவதானம் சபாபதி முதலியார் சொல்லியது

நாவிற் கிசைய நடவாக் கவிகளை ஞாலமிசைப்
பாவிற் கிசைவன போற்சீர் தளையெண்ணிப் பாடலென்றுந்
தாவிற் படுமென்று தாமோ தரம்பிள்ளை சங்கையறப்
பூவிற் புலந்தொகுத் தான்காரிகை விதிப் பொற்பமைத்தே.

கோப்பாய் —வித்துவான் சபாபதிப்பிள்ளை சொல்லியது

பூவிற் புலவர் புகழும் இயற்றமிழின்
பாவும் இனமுமுறும் பண்புணர்ந்து —நாவிற்
கிசையுநெறி கட்டளைக்க லித்துறைக்கீ தென்றான்
றசகுணச்சீர்த் தாமோ தரன்.

—— o ——

கட்டளைக் கலித்துறை

குருவணக்கம்

பிறைமதி யுறைசடைக் கறைமிடற் றிறைவன்
மறையறை யுருவ மறைத்தெனை யாண்ட
கரணையம் பதிவாழ் கருணா நிதிமல
அரணநீ ளிருண்மய வருணவத் தோங்கிய
எயிலார் திரிபுர மெரித்த
கயிலாய நாதன் கழறொழு தனனே.

அகத்தியர் வணக்கம்

மருமலி சந்தனத் தருமல யன்றமிழ்ப்
பரமா சாரிதாள் பரவுதூஉந்
திருமலி செந்தமி ழொருவரங் குறித்தே.

வெண்பா அகவல் கலி வஞ்சி யென்னு நாற்பாவினுள் ஒன்றாகிய கலிப்பாவுக்கினமாய்வருங் கலித்துறை விருத்தக் கலித்துறை யெனவுங் கட்டளைக் கலித்துறையெனவும் இருவகைப்படும். கலித்துறை யெனும் பெயரின் பொதுத்தன்மையையொழித்துக் கட்டளைக் கலித்துறைக்கு அதனைக் காரண இடுகுறிப் பெயராகக் கொள்வாருமுளர். அஃது மேலெடுத்துக் காட்டும் இலக்கணச் சூத்திரங்களான் விளங்கும்.

கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் இலக்கணக்கடலாகிய தொல்காப்பியத்திற்★ கூறப்பட்டிலது. விருத்தக் கலித்துறையின் இலக்கணமும் நேரே கூறாதொழிந்தனராயினுந் தொல்காப்பியர் அதனைக் குறிப்பாற் கூறினமையும் அஃது அவர் கூறிய பொருளிலக்கணத்தில் அமைந்து கிடந்தமையும் அந்நூற்குஞ் சிந்தாமணிக்கும், நச்சினார்க்கினியர் எழுதிய உரையாற் காணலாம். இதுகொண்டு கட்டளைக் கலித்துறை தோற்றிய காலஞ் சிறிதென ஒருசாரார் கூறுப. மற்றொரு சாரார் அஃது ★★ அகத்தியத்து அமைக்கப்பட்டிருந்ததென்றும் விருத்தக்கலித்துறை யொப்ப

★இஃதோரிழுக்கென்றார் ஒருவர். கட்டளைக் கலித்துறையின் இலக்கணங்கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தை யெடுத்துக் காட்டினன்றோ அவருண்மை விளங்கும். அஃதின்றி நிர்வாணியைச் சர்வ பூஷணதாரி யென்று மறுத்தலால் யாதுபயன்? "கான முயலெய்த வம்பினில் யானை—பிழைத்தவே லேந்த லினிது" என்றது இதற்குத்தானா?

★★கட்டளைக் கலித்துறையான் இயற்றப்பட்ட ஆறெழுத்தந்தாதி அகத்தியர் செய்ததெனச் சிலர் கூறுவதே இவர்க்கு ஆதாரமாம். அது சங்கத்தார் காலத்தில்லாமையால் அகத்தியர் வாக்கன்று என்பது பெரும்பான்மையோர் துணிவு.ஊர்பெய ரில்லார் நாட்டி லுயர்ந்ததைத் தெரிந்து சொல்லுஞ் சீரிஃதென்ன எத்தனைநூல்கள் அகத்தியர் தலையிலும் ஔவையார் தலையிலும் ஏறிக்கிடக்கின்றன.

அதனையுந் தொல்காப்பியர் ★ உய்த்துணர வைத்தனரென்றுஞ் சொல்லுப. ஆயினும் ஆதிகாலத்து நூல்களிற் கட்டளைக்கலித்துறையை ★★ யாண்டுங் காண்கிலேம். கட்டளைக் கலிப்பாப்போல அஃதும் பிற்றைநாள் தோன்றியது என்பதே அமையும்.

இக்காலத்து யாப்பிலக்கணங் கேட்போர் பெரும்பாலுங் கற்பனவாகிய யாப்பருங்கலம் காரிகை யாதியவற்றுள்ளும் "நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை" "கலித்துறையே –நெடிலடி நான்காய் நிகழ்வது" "ஐஞ்சீரடியி னடித்தொகை நான்மையோ டெஞ்சா தியன்றன வெல்லாங் கலித்துறை" எனக் கூறியது ★★★ விருத்தக் கலித்துறையையேயாம். இஃது காப்பியக் கலித்துறையெனவுங் கலிநிலைத்துறையெனவும் பெயர்பெறும். கட்டளைக்கலித்துறை திலதக்கலித்துறையெனவுங் கோவைக்கலித்துறை யெனவும் இருவகைப்படும். இவைதம்முட் பேதங்குறியாது கட்டளைக் கலித்துறையையே கோவைக்கலித்துறை என்பாருமுளர்.

கட்டளைக் கலித்துறையானே தந்நூலியற்றிய காரிகையார் சகல செய்யுட்கும் இலக்கணங்கூறித் தாமெடுத்துக் கொண்ட கட்டளைக்கலித்துறைக்கு இலக்கணங் கூறாதது ஆச்சரியம், தந்நூல் படித்தோர்க்குக் கட்டளைக் கலித்துறை இலக்கியப் பயிற்சியானே அமையுமெனக்கருதி அவ்வாறமைவதொன்றற்கிலக்கணமுங் கூறுதல் மிகையென விடுத்தார் போலும் அல்லது தஞ்செய்யுட் சிறப்பைத் தாமே சொல்லுதல் தகாதெனத் தவிர்த்தனரோ அறியேம்.

★ அகத்தியத்துள் விரவிக்கிடந்த இயல் இசை நாடகமெனும் முத்தமிழுள் இயற்றமிழ்ப்பொருள் முழுவதும் அகத்தியத்தினின்றும் விரிவாகத் தொல்காப்பியராற் கூறப்பட்டதென்னும் ஆன்றோர் சாட்சிக்கு இது மாறாகும். அன்றியும் ஒரு பாவினத்தின் இலக்கணத்தை முற்றும் ஒழித்து விடுவதா உய்த்துணர வைத்தலென்பது.

★★ நாயன்மார் தேவாரத்திருப்பதிகத்துட் கட்டளைக்கலித்துறை அமையப்பெற்றிருப்பினும் அதனை அக்காலந்தொட் டிதுகாறுந் திருவிருத்தமென்றே பெயரிட்டு வழங்குப இஃதொன்றே பூர்வகாலத்திற் கட்டளைக் கலித்துறை பிரத்தியேகமாக ஒரு பாவினமாய் நடைபெற்று நிலவாததற்குச் சான்றாகும். சேரமான் பெருமானாயனார் பொன்வண்ணத்தந்தாதியே முதன்முதற் கட்டளைக்கலித்துறை யென்னும் பெயரினால் வழங்கியது. பின்பு திருக்கோவையார் தோற்றியது.

★★★ பொதுவிலே சிறப்பு அடங்காதாகவும் இவற்றினால் விருத்தக் கலித்துறைக்குங் கட்டளைக்கலித்துறைக்கும் இலக்ஷணம் பொதுவாகக் கூறி அவ்விலேசானே கட்டளைக் கலித்துறையையும் அமைத்தாரென்பது பயனில் கூற்றென்க. இவ்வாறு கூறுவோர் நெடுங்கணக்கில் அடங்காத புலமையுமுண்டோ எனவுங் கேட்பார்போலும்.

கட்டளைக்கலித்துறைக்கு இலக்கணங் கூறப்புகுந்தோர் நால்வர். அவர் "முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்-கடையொரு சீரும் விளங்கா யாக-நேர்பதி னாறே நிரைபதி னேழென்-றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே "எனவுங்" கலித்துறை நெடிலடி நான்கொத்த வற்று -ளிடைநேர் வெண்சீ ரியற்சீர் முதனான்-கிடைநிரை வெண்சீ ரிறுதிச்சீர் மோனையாய்க் – கடையே கொண்டிறுங் கட்டளைக் கலித்துறை "எனவும் இலக்கணமும் உதாரணமுமாக" இடையே நேர் வெண்சீ ரியற்சீர் வருமுத லீரிருசீர்-கடையே யிடைநிரை வெண்சீராய் வெண்டளை காத்தடி நான்-குடையே கடையாய்க் கடைமோனை நான்கடி யோரெதுகை-நடையே கலித்துறை யாமெனக் கற்றோர் நவின்றனரே" எனவும் "நேர் முந்துறிற் பதினாறெழுத் தாகி நிரைமுதலாஞ்- சீர் முந்துறிற் பதினேழாய் முடிந்து செப்பாரடிக -ளோர்முந்து நான்கொத் திருபது சீரா லியன்றிடுமேற்-றோர்முந்து பேரல்குன் மாதே யஃது திலதமன்றே" எனவுங் கூறிய இலக்கணச் சூத்திரங்கள் குன்றக் கூறலென்னுங் குற்றமுடையன வாதலானும், பிற்றைநாட் டோற்ற முடையதாயினும் பெரும்பாலும் இக்காலத்தில் அந்தாதிகள் தனியன்கள் கலம்பகம் கோவைத்துறை முதலியவைகளெல்லாங் கட்டளைக் கலித்துறையான் இயற்றப்படுகின்றமையானும் வெண்பாவும் விருத்தமுமொப்பச் சாதாரண வழக்கில் வந்துபயிலும் இச்செய்யுளிலக்கணந் தமிழ்மாணாக்கர் அனைவர்க்கும் மிக உபயோகமாமெனக் கருதிப் பலநூல்களினும் ஆங்காங் கிலைமறை காய்போலக் கிடந்தவற்றைத் திரட் டி ஈண்டெழுதலாயினோம்.

நுண்ணறிஞர்பால் "யான்மொழிந்த –பருப்பொருடானும் விழுப்பொருளா" மெனத்துணிந்தவரைப் போற் புகுந்த நமக்குப் பயம் யாது? குற்றங் காணினுங் கவிவல்லோர் பொறுப்பர் மற்றையோர் யாது சொல்லியுமென்!!

உத்தமர்க ளுண்மை யுவப்பர்குறை யோதிலார்
மத்திமருக் கவ்விரண்டும் வையகத்தே-யொத்துலவுங்
குற்றங் குணமிதென்று கூறிடினுங் கொள்ளாரே
மற்றை யதமர் வகுத்து.

சூத்திரம்

அடிதொறும் வெண்டளை யாய்விளங் காய்முடி வாய்நடுவே
நெடிலிறுங் காய்விள நேரா தடுத்து நெடிலிடைக்காய்
நடைபெற லற்றுநன் னேர்பதி னாறு நவிலெழுத்தாய்க்
கடையுறு மோனைமற் றேயோர் விகற்பக் கலித்துறையே.

இக்காரிகை என்னுதலிற்றோவெனின் கட்டளைக் கலித்துறையாமாறுணர்த்துதனுதலிற்று. இதன்பொருள்: ஓர் விகற்பக் கலித்துறை= அடிநான்கும் ஓர் எதுகை பெற்றே வருதலையுடையதாகிய கட்டளைக்கலித்துறைச் செய்யுளானது, அடிதொறும் வெண்டளை ஆய்= ஐஞ்சீரின் மிக்குங் குறைந்தும் வருதலில்லாத தனது அடிகடோறுமுள்ள முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது, விளங்காய் முடிவாய்= கடையொரு சீரும் விளங்காயாக, நடுவே நெடில் இறும் காய் விளம்நேராது=அடிகளின் நடுவிலே நெடினேரசையாலிற்ற மூவசை வெண்பாவுரிச்சீருங் குறினெடி னிரையசையாலிற்ற ஈரசை அகவல் விளஞ்சீரும் மருவாமல், அடுத்து நெடில் இடைக்காய் நடைபெறல் அற்று=நெடி னேரசைச் சீரை நடுவேயுடைய மாங்காய்ச்சீர் தனக்குச் சிறப்பில்லதாய் ஒவ்வோரிடத்தருகி வருமேனும் அஃதிரண்டும் பலவும் அடுத்துவரப்பெறாமல், நல்நேர் பதினாறு நவில் எழுத்தாய்= நேரசை முதலாகவுடைய செய்யுட்கு ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாகிய பதினாறெழுத்தும் நிரையசை முதலாகவுடைய செய்யுட்குப் பதினேழெழுத்து மாதிய வரையறைப்பட்டதாய், மோனை ஏ கடை உறும்= அடிதொறும் கடைச்சீரில் மோனையுஞ் செய்யுண் முடிவில் ஈற்றசை ஏகாரமும் பெற்றுநடக்கும் என்றவாறு.

அடிதொறும் வெண்டளைய யெனவே ஓரடிமுடிவருசீரோடு அயலடி முதற்சீரானாய தளை கலித்தளையாயும் வரப்பெறுமென்பதூஉம், இப்பாவினத்திற்கு வெண்டளையே சிறப்புடைத்தென்பதூஉம், ஆகவே அவ்வாறு ஆண்டுங் கலித்தளை பெறாது வெண்சீர் வெண்டளையே விரவிய நேரசைக் கட்டளைக் கலித்துறை நிரையசைக் கட்டளைக்கலித்துறையினும் ஓசைவகையால் நயமுடைத்தென்பதூஉம், விளங்காய் முடிவாயெனவே இரட்டுற மொழிதலென்னும் உத்தியால் அடிமுடிவிடத்தன்றி முதலிடையகத்து விளங்காய் வரப்பெறாதென்பதூஉம், நடுவே நெடிலிறுங் காய்விள

நேராதெனவே அடியீற்றின்கணெக்காலத்தும் வருதற்குரிய தல்லாத விளமொழித்து நெடினேரசைக்காய்ச்சீர் வருமென்பதூஉம், அடுத்து நெடிலிடைக்காய் நடைபெறலற்று எனவே தனித்தொவ்வோரிடத்தில் வரப்பெறினும் அஃது சிறப்புடையதன்றென்பதூஉம், நிரையிடைக்காய் எவ்வாற்றானும் வரப்பெறாதென்பதூஉம், நன்னேரெனவே நேரின் சிறப்பு நிரைக்கின்றென்பதூஉம், நேர்பதினாறெனவே நேரசைக்கு ஒரெழுத்துக் கூடியதே நிரையசை யாதலால் நிரைக்குப் பதினேழெழுத்தென்பதூஉம், நலிலெழுத்தெனவே உயிரியக்கத்தானன்றி நவிலொணாத உடம்பு தவிர்த்தென்பதூஉம் கொள்க.

அடுத்து என்பதைச் சிங்க நோக்காய் நடுநிலைத் தீபமாகக்கொண்டு நடுவே நெடிலிறுங்காய்விள நேராதென்பதோடுமொட்டி நெடிலீற்றுக் காய்விளஞ்சீர்கள் நடுவிலே ஓரோரிடத்துவரவும் பெறூஉமெனக் கொள்க.

முதலிறுதியாகாமையானுந் தே புளி கரு கூவானன்றிக் காய்விளத்தான் அடிமுத றொடங்கல் கூடாமையானும் நடுவேயெனக் கூறல் வேண்டுமாலோ வெனின் அடியீற்றுக் காய்ச்சீரை நோக்கியதென்க. அன்றி இயற்கைப் பொருளையிற்றெனக் கிளத்தலெனினும் அமையும். இவ்விலக் கணத்தால் மேலெடுத்துச் சொல்லிய இடையே நேர்வெண் சீரென்றற்றொடக்கத்துச் சூத்திரஞ் சிறப்புடைக் கட்டளைக்கலித்துறை யன்றெனக்கொள்க.

விளங்காய் முடிவாய் என்றனமாயினும் அவ்விளங்காய் ஒரொருகாலிடையே யொற்றுப் பெற்று மாங்கனித்தன்மையாகியுந் தேமாந்தண்பூப் போன்றும் நடப்பதுமுண்டு. "ஒற்று நிலையற் றிணையசை யுறவும்– பெற்று மாங்கனி யருகலும் பிறவும்– உற்று மொழுகுங் கலித்துறை யொருசார் "என்றார் பிறவாசிரியரும். இதனை,

வரபர சங்கர வேதா ரணிய மடங்கலஞ்சுஞ்
சரபர சங்கர ளம்பொதி வாய்விழித் தையல்பங்கின்
அரபர சங்க ரவிபோ லொளியி னணிதிகழும்
புரபர சங்கர வரநம னார்வரும் போதத்திலே.

என்னும் மறைசையந்தாதிச் செய்யுளிலே காண்க. இதில் தையல்பங்கின் எனத் தேமாந்தண்பூப் போன்றும் போதத்திலே எனத் தேமாங்கனி போன்றும்

பாதமுடிவில் விளங்காய்ச்சீர்கள் வந்தன. இவ்வாறு வருவனவற்றிற்கு இடையொற்றொழித்து ஓசையூட்டுக.

அடைமொழி யினமல்லதுந் தருமாண்டுறினாதலால் மோனை அடியை நோக்கியதும் ஏ செய்யுளை நோக்கியதும் உணர்த்துவான் மற்றுக் கொடுத்துப் பிரிக்கப்பட்டது.

கடையுறு மோனையென்றது சிறப்புநோக்கி. இறுதிச்சீரின்கண் வரப்பெறுதலில்லாது மோனை மற்றி யாண்டு வரினுமென், அதைக் கடைத்தன்மைத்தாய மோனை யென்றே சொல்லுப. மோனை சீர்மோனையெனவுஞ் சொன்மோனை யெனவுஞ் இருவகைப்படுமாதலிற் சிலகாற் "தேனார் கமழ்தொங்கன் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்–கானார் மலையத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்" என்றாற்போலச் சீர்முதலிலின்றி மொழிமுதற்கண்ணும் மோனைவரும். இதனை "உலகம் யாவையுந் தாமுள வாக்கலும் ..... தலைவ ரன்னவர்க் கேசரணங்களே" என்னுங் கம்பர் வாக்கினாலுமுணர்க.

இனிக் கடைச்சீரின்கண் மோனை தொடாது ஆன்றோர் செய்யுட் செய்தனராலோவெனின் அவ்வாறாய மோனை கடைத்தன்மைத்தாய மோனை யாமென்பது மேலைக்கூறுஞ் சூத்திரத்தாலுணர்க.

மோனைவிதி

முற்றாகு மோனை முதலா மிறுதி முதலயல்வே
றுற்றா வதுமது வோர்பின் முனோடிடை யோய்ந்துநிற்கப்
பெற்றா லஃதிடை பேசைந்தில் மோனை பிறங்கிலதேற்
கற்றார் நவில்வ ரன்றோ கடையென்று கலித்துறைக்கே.

இஃதென்னுதலிற்றோவெனின் கட்டளைக்கலித்துறையின் மோனைச் சிறப்பாமா றுணர்த்துதனுதலிற்று. இதன் பொருள்: இடவகையான்★ இணைபொழிப்பாதி யெழுவகைப் பட்டதேனுஞ் சிறப்புவகையான் மோனை கட்டளைக்கலித்துறைக்கு மூன்று வகைப்படும். அடிமுழுது மோனை வரத் தொடுப்பது உத்தம மோனையாம். ஈற்றயற்சீரும்

★ நெடிலடிக்கு இணைபொழிப்பாதி பேதங்கூறுவோர் ஈற்றுச்சீர் மோனையை ஈற்றயற்சீர் மோனையோடு வியாபகமாக்கியே கூறுப.

இரண்டாஞ்சீரும் ஒன்றேனும் இரண்டுமேனும் மோனையாகாமல் வேற்றெழுத்துப் பெற்று நிற்கத் தொடுப்பதும் உத்தம மோனையேயாம். ஆயினும் முற்றுமோனையொப்பச் சிறப்பிலதென்பது இழிவு சிறப்பும்மையாற் காட்டப்பட்டது. இவற்றுள்ளும் முறையே தாரதம்மியச் சிறப்புநோக்கி இறுதியயலை முற்கூறினமையால் அஃதொன்றொழிந்ததே உத்தமமாக இரண்டாஞ் சீரொன்றொழிந்தது மத்திமமாக, இரண்டுமொழிந்தது அதமமாமெனக் கொள்க. மூன்றாஞ்சீர் மோனை பெறாதொழிவதும் அஃது தனக்குப் பிற்சீர் முற்சீரோடாவது அல்லது அவ்விரண்டோடுமாவது மோனை பெறாதொழிவதும் மத்திமமோனையாம். இவையும் முன்னையனபோல உயர்விழிவுமுறைப்படி வைக்கப்பட்டன. இறுதிச்சீராகிய ஐந்தாவதின்கண் மோனை வந்திலதேல் மற்றைய சீரனைத்தும் மோனைபெற்றக்கண்ணும் அஃததம மோனையென்று யாப்பிலக்கணப்புலவர் கூறுவ ரென்றவாறு. இவற்றிற்கெல்லா முதாரணம் விரிக்கிற் பெருகு மாதலின் விடுத்தனம். இம்மோனையிலக்கணச் செய்யுளில் நான்கடியும் உத்தமமோனையாம்.

மோனைச் சிறப்பின் கிரமமாமாறு

உத்தம மோனை

க	உ	ங	ச	ரு
க	உ	ஙு	*	ரு
க	*	ஙு	ச	ரு
க	*	ஙு	*	ரு

மத்திம மோனை

க	உ	*	ச	ரு
க	உ	*	*	ரு
க	*	*	ச	ரு
க	*	*	*	ரு

அதம மோனை

க	உ	ங	ச	*
க	உ	ஙு	*	*
க	*	ஙு	ச	*
க	உ	*	ச	*
க	*	ஙு	*	*
க	உ	*	*	*
க	*	*	ச	*

இனித் திலதக் கலித்துறைக்குங் கோவைக் கலித்துறைக்குந் தம்முட் பேதம் யாதெனின் மேற்கூறிய இலக்கணமுடையன யாவுந் திலதக் கலித்துறையாம். திலதக் கலித்துறை அனைத்தும் கோவைக் கலித்துறையாகா. கோவைக் கலித்துறையிலக்கணம் பின்வருஞ் சூத்திரத்தாலுணர்க.

சூத்திரம்

மூன்றோ டிரண்டயல் முன்னிய சீர்கள் முடிவடியில்
தேன்றோய் மொழியின் றிறம்பக் கிசைத்த சிறப்புடைத்தாய்
வான்றோய் கலித்துறை வந்திடிற் கோவையின் வாய்மையதென்
றூன்றோய்ந்த வேல்விழி யாய்உயர் பாவல ரோதுவரே.

இஃது கோவைக் கலித்துறையாமாறுணர்த்துதனுதலிற்று. இதன்பொருள், கட்டளைக் கலித்துறையானது தனது ஈற்றடியிலேயுள்ள மூன்றாம் இரண்டாஞ்சீர்கள் தம்மிலேயாதல் தமது அயற்சீர்களோடாதல் ஓசைபிரிந்து மொழி பக்குவிட்டுப் பக்குவிட்டமொழி முற்சீரோடொன்றி ஒழுகிய ஓசைத்தாகிய சிறப்பினையுடைத்தாய்வரிற் கோவைக்கலித்துறை யாமென்றவாறு. "நெடிலடி நான்கவை நேர்ந்துநின்றே பதினாறெழுத்தாய்-முடிவனவாம்பதி னேழுநிரைவரின் முன்மொழிந்த-படிவழுவாது நடைபெறு மோசைவண் டேந்திநின்ற-கடிகமழ் கோதைக் கயனெடுங் கண்ணி கலித்துறைக்கே" யெனப் பொன்பற்றி காவலனார் கூறியதும் இவ்வோசைச் சிறப்பு நோக்கியென்க.

உதாரணம்

மையார் குவளை வயற்றஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
நையா தொழிமதி நன்னெஞ்ச மேயினி நம்மினுந்தன்
நெய்யார் கருங்குழற் றேமலர் வாடின நீலவுண்கண்
கையால் அழைப்பனபோல் இமையா நிற்குங் காரிகைக்கே.

இது மூன்றாஞ்சீர் பக்குவிட்டு முற்சீரோடொன்றியது.

கறையா ரிலங்கிலை வேலென்பர் காமக் கடற்கெதிர்ந்த
நிறையாம் வரம்பினி னிற்பதன் றானிறை நீருலகை
மறையாமல் வன்கலி மாற்றிய வாணன்றென் மாறையினாம்
பொறையார் தவஞ்செய்திலேம் நெஞ்சமே யென்புகல்வதுவே.

இது மூன்றா நாலாஞ் சீர்கள் பக்குவிட்டு முற்சீர்களோடொன்றியது.

நாவியுங் காரகி லாவியுந் தோய்குழ லாணியஞ்சேல்.
வாவியுஞ் சோலையுஞ் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவயற்
காவியுஞ் சேலுங் கமலமுங் காட்டுநின் கண்மலரும்
ஆவியும்போல் இனியார் அணியாக அணிந்தனனே.

இது இரண்டா மூன்றாஞ் சீர்கள் பக்குவிட்டு முற்சீர்களோடொன்றியது.

வண்கொடி யேய்மதின் மாறை வரோதயன் வாணனொன்னார்
எண்கொடி யேனெய்த விவ்வண்ண நீயிரங் கேலிரங்கேல்
நுண்கொடி யேரிடை வண்டிமிர் பூங்குழ னூபுரத்தாட்
பெண்கொடியே பிரியேன் றரியேன் நிற்பிரியினுமே.

இது இரண்டாமூன்றா நாலாஞ்சீர்கள் பக்குவிட்டு முற்சீர்களோடொன்றியது.
பொய்யாமொழிப்புலவர் தஞ்சைவாணன் கோவையிலும் அமிர்தகவிராயர் ஒருதுறைக் கோவையிலும் பெரும்பான்மைய செய்யுட்கள் கோவைக்கலித்துறையா மென்றுணர்க.

மலைநாடு கொண்ட வழுதிகண் போல்பவன் வாணனெண்ணெண்
கலைநாடு தஞ்சையர் காவலன் மால்வரைக் கன்னிபொன்னாண்
முலைநா முயன்று முயங்கின மான்முயன் றாலினையைந்
தலைநாக நன்மணி யும்பெற லாமித் தரணியிலே.

மன்னா வுலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன்வெற்பி
லென்னாவி யன்ன விவளிடை மேலிணை கொண்டெழுந்த
பொன்னா ணணிகொங்கை போலவன் டீருங்கள் பொய்கையுண்டோ
நன்னா ளரும்பொரு தாளிரண் டீனு நளினங்களே.

என்பன போல மொழிபிரிந்தும் ஒழுகிய ஓசைத்தாய சிறப்பினைப் பொருந்தி வராதன கோவைக்கலித்துறை யாகாவெனக் கண்டுணர்க.

நெடினேரசையீற்றுக் காயுங் குறினெடினிரையசையீற்று விளமுமாகிய சீர்கள் செய்யுளினிடைப்புக்குக் கட்டளைக் கலித்துறைத் தன்மை கெடுதலை அடியில் வரும் அறுசீர்க் கழிநெடிலடி விருத்தச் செய்யுளானுணர்க.

நாவின்பா லோதினா னைந்தைஞ்சீர் வாய்மைபோ னாட்டுபாவெப்
பாவின்பா லாகுமோ பார்மீதே காரிகைப் பாடலாமோ
ஈவின்பா லச்சுநேர்க் கீரெட்டாய் வெண்டளைக் கேற்றதாகிப்
பூவின்பாற் சேர்விளங் காயீற்றே பூண்டிப்பா போந்ததாலே.

இச்செய்யுள் இதுகாறும் யாப்பிலக்கணங்களிற் கட்டளைக் கலித்துறைக்கு அமைத்த விதிகள் சற்றாயினும் வழுவாமல் இயற்றப்பட்டதாயினுங் கட்டளைக் கலித்துறையாகாமை காண்க. ★ நாவிற் கிசைந்ததே பா. ஆதலால் எத்துணை யிலக்கணங் கற்பிக்கப்பட்டுக் கிடப்பினும் இலக்கியவமைதி யறிந்து நாவொழுகும்வழிப் பாடுதலே சிறப்பன்றி எழுத்தும் அசையும் விரல்மடித் தெண்ணிச் சீர்வகுத்துத் தளைதடவிப் பாட்டியற்றல் புலவர் தொழிலன்று. அஃது போலிப் புலவரியல்பென்க.

சங்கீத லக்கணமுடையார்க்கு இராகம் போல யாப்பிலக்கண முடையார்க்கு ஓசையாம். இரண்டுஞ் செவிகருவியாக உணர்வார்க்கன்றி வாரா. எத்துணை விரிவாய் எழுதப்பட்டுக் கிடப்பினும் இலக்கண வாராய்ச்சியாற் சங்கீதம் அமையாதவாறு "எழுத்தசை சீர் பந்தமடிதொடை பாவின" விதிகளின் ஞானத்தாற் கவி வல்லப முறாது.

★இழுக்குடைய பாட்டி லிசைநன் றென்பதனால் இஃது தவறென்றவரது ஆனாப்புலமை நன்றாகவிருந்தது!! என்னினைந் தென்சொன்னார்? இசையி லிழுக்குடைய பாட்டு நன்றெனினன்றோ இது மறுக்கப்படும்!!! செவிலித் தாயிலக்கணத்தைக் கண்டு பெற்றதாயை மறுப்பார் போலும்.

சங்கீத லக்ஷணஞ் சற்றாகிலும் அறியாமலும் தாம்பாடும் இராகத்தின் பெயர்தானும் இன்னதென்று தெரியாமலும் இருப்பினும் கேட்டோர் மெய் புளகிக்கச் செவிக்கின்பம் பயக்கும் இராகங்களை நாப்பழக்கத்தானே அமைத்துப்பாடுஞ் சிறுவர்கள் எத்தனை பெயருளார்? அஃதொப்ப எழுத்திலக்கணமுந் தெரியாராயினும் சரஸ்வதியே ஓர் மானிட உருத்தரித்து நின்று கவிபாடினாற்போலச் சொற்சுவையும் பொருட்பொலிவும் ஓசையுன் னதமும் பொருந்தி இலக்கணவழுவின்றி இன்பரசமொழுகக் கவிபாடும் வரகவிகள் எத்தனை பெயருளார்? இதனானன்றே கவிவல்லபம் இம்மைக்கல்வியே கருவியாக அமைவதொன்றன்று எனவும் முன்னைச் சன்மத்துப் பெற்ற வன்மையால் பிறவியிலே பெறுவதோர் வரமெனவும் உலகங்கூறுவது. ஆயினும் "ஊழையு முப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழா துஞற்று பவர் "என்பதனால் இடைவிடா முயற்சி துணையாகவும் கம்பர் வீட்டடுப்புங் கவிபாடும்" என்பதனால் வித்துவான்களோடு கூடுஞ் சகவாசமும் அன்னோர் நூலோடு ஊடாடும் பயிற்சியுங் காரணமாகவும் கவித்துவம் வருதலுண்டு என்றாலும் முதலிலே செவியே கருவியாகப் பாக்களுக்கு வகுத்த நால்வகை ஓசைவிகற்ப உணர்ச்சிபெற்று ஆலாபனை மாத்திரத்தானே இஃது இன்ன வோசையென்று கிரகிக்கப் பயின்றாலன்றிப் பாவன்மை வாராதென்றுணர்க.

சென்ன பட்டணம்

யாழ்ப்பாணம்,

விஷு

சி.வை. தாமோதரம்பிள்ளை

வைகாசி மீ 21

T. 6370

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு.நா.கலியமூர்த்தி,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.ச.இராமநாதன்,
முன்னாள் தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

திரு.த.கோ.ப.கோவிந்தசாமி, பி.காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.கலைமாச்செல்வர் எஸ்.டி காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் அரசுச் செயலாளர், சென்னை.

திரு.சிலம்பொலி சு.செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.,
சென்னை.

திரு.முனைவர்.கி.கருணாகரன்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.தமிழண்ணல், எம்.ஏ.,பிஎச்.டி.,
மதுரை - 625 020.

திரு.முனைவர்.மு.கோவிந்தராசன்,
சென்னை.

திரு.முனைவர்.சோ.ந.கந்தசாமி, எம்.ஏ.,பி.லிட்.,பிஎச்.டி.,
முன்னாள் இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.மா.இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

திரு.தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு.முனைவர்.ஈரோடு தமிழன்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
சென்னை.

திரு.பேராசிரியர் பி.விருத்தாசலம், எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், த.உ.க. கலைக்கல்லூரி.

திரு.முனைவர்.இரா.குருநாதன்,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு.புலவர்.செ.இராசு, எம்.ஏ.,
இணைப்பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

திரு.புலவர்.ஆ.பாலன், எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

திரு.புலவர்.மீனா.இராமதாசு,எம்.ஏ., எம்.எட்.,
முன்னாள் தலைமைத் தமிழாசிரியர், உ.மே. நி. பள்ளி

திரு.முனைவர்.பா.மதிவாணன், எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

Regd. No. TN/TJ/24 நூல் அஞ்சல்

பெறுநர்

திருமிகு

நூலகர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 600 005.

ஆசிரியர்
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் ஆசிரியர் – ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ. 100 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச் சங்க மணிவிழா மலர்	ரூ. 80 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60 00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ. 6 00
பரணர் – ஆசிரியர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை	ரூ. 35 00
பாயிர விருத்தி – ஆசிரியர் அரசஞ் சண்முகனார்	ரூ. 60 00
அறிவியல் தமிழ்	ரூ. 125 00
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்	ரூ. 100 00

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

வெளியிடுபவர் : திரு.நா.கலியமூர்த்தி.
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : இரா.வைஜெயந்திமாலா, லக்மி பிரிண்டர்ஸ்,
1086, காக்கா வட்டாரம், தஞ்சாவூர் - 613 009.